இதழ் 361
18 அக்டோபர் 2025
13 பக்கங்கள்
இலக்கு
வாராந்த மின்னிதழ்
GLOBAL TAMIL MEDIA CENTER
youtube.com/@IlakkuWeb2.0
facebook.com/ilakku.ilakku.10
twitter.com/Ilakku1

# பிரதமர் ஹரிணி; ஜே.வி.பி; இராஜதந்திரம்

விதுரன்





# இந்தியாவில் திராவிடர்களின் தனிநாடும்.! இலங்கையில் தமிழர்களின் தனிநாடும்..!

பா. அரியநேத்திரன்

# சத்தியாக்கிர போராட்டத்தை ஓய்வின்றி தொடரும் முத்து நகர் விவசாயிகள்

கின்னியான்





info@ilakku.org

# இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இலங்கை பயன்படுத்தப்படாது: பிரதமர் ஹரிணி



இலங்கை பிரதமர் ஹரிணி அமரசூரிய நேற்று (17) புதுடெல்லியில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்தார்.

இரு நாடுகளுக்கும் இடையேயான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு இதன்போது பரந்த அளவிலான பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுள்ளன.

கல்வி, பெண்கள் அதிகாரம், புத்தாக்கம், அபிவிருத்தி ஒத்துழைப்பு, மற்றும் மீனவர்களின் நலன் ஆகிய முக்கிய துறைகளில் கவனம் செலுத்திப் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் இலங்கை மண் ஒருபோதும் பயன்படுத்தப் படாது என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

பிரதமர் ஹரிணி அமரசூரிய, தாம் புதுடெல்லியில் பயின்ற பல் கலைக்கழகத்தில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய போது இந்த உறுதி மொழியை வழங்கியுள்ளார்.

இந்தியாவின் பாதுகாப்பை அச்சுறுத்தும் வகையில் இலங்கை மண் ஒருபோதும் பயன்படுத்தப் படாது என்ற இறையாண்மைக் கொள்கையை இலங்கை நிலைநிறுத்தி வருகிறது என்றும், இக்கொள்கை “புனிதமாக” நிலைத்திருக்கும் என்றும் பிரதமர் ஹரிணி அமரசூரிய உறுதியளித்தார்.

அத்துடன், “ஜனநாயகம் என்பது வேடிக்கை பார்ப்பவர்களின் விளையாட்டு அல்ல, அது கடினமான உழைப்பு” என்றும்

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

# இலங்கைக்கு வலுவான நிறுவன சீர்திருத்தம் அவசியம்: IMF வலியுறுத்தல்

ஆழமான பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டு வரும் இலங்கையில், வலுவான நிறுவன சீர்திருத்தங்கள் மற்றும் சிறந்த பொது முதலீட்டு மேலாண்மை என்பன அவசியமாகும் என்று, சர்வதேச நாணய நிதியம் வலியுறுத்தியுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய பசுபிக் பிராந்தியத்துக்கான பிரதிப் பணிப்பாளர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய தேவை, கட்டமைப்பு சீர்திருத்தங்கள் மூலம், மீள் தன்மையை உருவாக்குவதே என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், இலங்கை அரசாங்




கம், சர்வதேச நாணய நிதிய ஆதரவு திட்டத்தின் கீழ் சீர்திருத்தங்களுக்கு உறுதியளித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அந்த வகையில், இதுவரை ஏற்பட்ட முன்னேற்றங்களைப் பாராட்டியுள்ள அவர், சர்வதேச நாணய நிதிய திட்டத்தில் வகுக்கப் பட்ட அளவுகோல்களுடன் தொடர்ந்து முன்னேறுவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தியுள் ளார்.

# குழந்தைகளுக்கான பவுடரில் புற்றுநோய் இரசாயனம் கலப்பு

புற்றுநோயை உண்டாக்கும் இரசாயனப் பொருட்களை கொண்ட குழந்தைகளுக்கு பயன்படுத்தும் பவுடரை விற்பனை செய்த அமெரிக்காவின் மிகவும் பிரசித்தி பெற்ற முன்னனி நிறுவனமான Johnson & Johnson (J&J) என்ற நிறுவனத்தின் மீது 3000ற்கு இங்கு மேற்பட்டவர்கள் வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

ஜான்சன் & ஜான்சன் 1960களின் முற்பகுதியிலேயே அதன் இரசாயன அடிப்படையிலான டால்கம் பவுடரில் நார்ச்சத்து வடிவ டால்க், ட்ரெமோலைட் மற்றும் ஆக்டினோலைட் இருப்பதை அறிந்திருந்தது என்று கேபிலாவால் என்ற சட்ட நிறுவனத்தால் கொண்டுவரப்பட்ட வழக்கு தெரிவித்துள்ளது. இரண்டு தாதுக்களும், அவற்றின் நார்ச்சத்து வடிவத்தில் இருக்கும் போது அது ஆஸ் பெஸ்




டாஸ் என வகைப்படுத்தப்படும், அவை ஆபத்தான புற்று நோய்களுக்கு காரணமானவை.

தாதுக்கள் புற்றுநோய்களுடன் நேரடியாக தொடர்புடையவை என்பதை அறிந்திருந்தாலும், நிறுவனம் அதன் குழந்தைகளுக்கான பவுடரின் உறைகளில் அது குறித்து ஒருபோதும் எச்சரிக்கைகளை வெளியிடவில்லை என்று நீதிமன்ற ஆவண ங்கள் குற்றம் சாட்டுகின்றன. அதற்கு பதிலாக, பவுடரை

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# இஸ்ரேலுக்கு செல்லும் அமெரிக்க படை மீண்டும் போர்?

இஸ்ரேலுக்கும்-பாலஸ்தீனத்திற்கும் இடையிலான போரை நிறைவு செய்த அமெரிக்கா, கத்தார், எகிப்து மற்றும் துருக்கி ஆகியநாடுகளின் ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக, கிட்டத்தட்ட 2,000 பாலஸ்தீன கைதிகளை விடுவிப் பதற்கு ஈடாக, ஹமாஸ் குழு 20 இஸ்ரேலிய கைதிகளை விடுவித்தது. செவ்வாயன்று, ஹமாஸ் ஏழு இறந்த கைதிகளின் சடலங்களை வழங்கியது, இருப்பினும் யூத அரசு அவர்களில் ஒருவர் பாலஸ்தீனியருக்குச் சொந்தமானவர் என்று கூறியது.

இறந்த அனைத்து கைதிகளின் உடல்களையும் வழங்குவதன் மூலம் ஒப்பந்தத்தின் தனது பங்கை



நிறைவேற்றியதாகவும் “மற்ற 19 இறந்த பணயக்கைதிகளின் எச்சங்களைத் தேடுவதற்கு மிகுந்த முயற்சி மற்றும் சிறப்பு உபகரணங்கள் தேவை” என்றும் ஹமாஸ் தெரிவித்துள்ளது.

ஹமாஸ் 28 உடல்களையும் விடுவிக்க வேண்டும் என்று

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

# சீனாவுக்கு உளவு பார்த்த இந்திய அதிகாரி அமெரிக்காவில் கைது



இந்திய நிபுணரும் அமெரிக்க வெளியுறவுத்துறையின் ஆலோசகருமான ஆஷ்லே ஜே. டெல்லிஸ், 1,000 பக்கங்களுக்கும் அதிகமான இரகசிய பாதுகாப்பு தகவல்களை அங்கீகரிக்கப்படாமல் வைத்துக் கொண்டதற்காக செவ்வாய்க்கிழமை(14) கைது செய்யப்பட்டார்.

“இந்த வழக்கில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் நமது குடிமக்களின் பாதுகாப்பிற்கு பெரும் ஆபத்தை விளைவிக்கின்றன,” என்று வழக்கு ரைஞர் ஹாலிகன் கூறினார். குற்றம் நிரூபிக்கப்பட்டால், டெல்லிஸ் பத்து ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை மற்றும் $250,000 வரை அபராதம்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# ஆப்கான் – பாகிஸ்தான் போர் நிறுத்தத்திற்கு இணக்கம்

பாகிஸ்தானும் ஆப்கானிஸ்தானும் பல ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு மோசமான எல்லை மோதல்களில் கடந்த வாரம் ஈடுபட்டதுடன், அங்கு பலர் கொல்லப்பட்டும், இரு தரப்பினரினதும் காவல் நிலைகள் கைப்பற்றப்பட்டதைத் தொடர்ந்து 48 மணி நேர போர் நிறுத்தம் புதன் கிழமை(15) நடைமுறைக்கு வந்துள்ளது. ஒவ்வொரு நாடும் மற்றொன்று போர் நிறுத்தத்தை கோரியதாகக் கூறுகின்றன.

பாகிஸ்தான் தாலிபான் (TTP)



போராளிகளுக்கு ஆப்கானிஸ்தான் அடைக்கலம் அளிப்பதாக பாகிதான் தொடர்ந்து குற்றம்சாட்டி வருகிறது, அதை காபூல் நிராகரிக்கிறது.

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

# ஹவுத்திகளின் இராணுவத் தளபதி இஸ்ரேலின் தாக்குதலில் பலி



ஏமனின் ஹவுத்திகள் குழுவின் மிக மூத்த இராணுவ அதிகாரிகளில் ஒருவரான, முகமது அப்துல் கரீம் அல்-கமாரி, இஸ்ரேலின் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளார்.

இந்த தாக்குதலை தாமே மேற்கொண்டதாக இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் கட்ஸ், அல்-கமாரி கடந்த வியாழக்கிழமை(16) தெரிவித்துள்ளார்.

இந்த தாக்குதலை தொடர்ந்து இஸ்ரேலுடனான மோதல் இன்னும் முடிவடையவில்லை எனவும் பதிலடி வழங்கப்படும் எனவும் ஹவுத்திகள் தெரிவித்துள்ளனர். ஆகஸ்ட் மாதம், தலைநகர்

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

# காத்தான்குடி கறுப்பு அக்டோபரும்! யாழ்ப்பாணத்து கறுப்பாடும்!

**பா. அரியநேத்திரன்**

*கடந்த 35, வருடங்களுக்கு முன் 1990, அக்டோபர் 30ல் யாழ்ப்பாணத்தில் இருந்து முஸ்லிம் மக்களை வெளியேறுமாறு விடுதலைப்புலிகள் கூறியதற்கு அமைவாக அந்த மக்கள் யாழில் இருந்து பாதுகாப்பாக வெளியேறினர்.தற்போது அவர்கள் மீண்டும் யாழ்ப் பாணத்தில் கணிசமான முஸ்லிம் மக்கள் திரும்பவும் அங்கு வாழ்கின்றனர் என்பதை பார்க்கலாம்.*


*அந்த 35ம் ஆண்டு நினைவை 2025, அக்டோ பர்,18, இன்று சனிக்கிழமை காத்தான்குடியில் "கறுப்பு அக்டோபர்" என பெயர் சூட்டி "கறுப்பு ஆடு" ஒன்றை யாழில் இருந்து பிரதம விருந்தினராக வர வழைத்து காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளன அஷ் ஷஹீத் அஹமட் லெப்பே ஹாஜியார் ஞாபகார்த்த மண்டபத்தில் இடம்பெறுகிறது. இதற்கு பிரதம அதிதியாக உரையாற்ற வைத்துள்ளனர். இந்த நிகழ்வின் ஏற் பாட்டாளராக காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளன அஷ்-ஷஹீத் மற்றும் முஸ்லிம் அரசியல் வாதிகள் உள்ளனர்.*

*நினைவுகளை மீட்டுப்பார்ப்பது அதற்காக கூட் டங்களை நடத்துவது என்பதில் தவறில்லை. ஆனால் இந்த நிகழ்வில் உரையாற்ற யாழ்ப்பாணத்தில் இருந்து அழைத்த அந்த பிரமுகர் தொடர்பாக பல சந்தேகங்களை தோற்றுவித்துள்ளது. சிவில் மத்திய நிலைய தலைவர் அருண் சித்தார்த் என்பவரை ஏன் அழைத்தார்கள் என்பது புரியவில்லை.*

*தமிழ்தேசிய அரசியலுக்கு எதிராக தொடர்ந்தும் கருத்துக்களை கூறி பிரதேசவாதம், சாதிவாதம் பேசி எந்த அரசு ஆட்சியமைத்தாலும் அவர்களுக்கு ஆதர வாக தமிழ்த்தேசியத்திற்கு எதிராக செயல்படும் நபரை திட்டமிட்டு காத்தான்குடியில் அழைத்து உரையாற்றவைப்பதன் மூலம் மீண்டும் தமிழ் முஸ்லிம் மக்களிடையே ஒரு விரோதப்போக்கும், பிரிவினைவாதத்தையும் தூண்டும் ஒரு செயலாகவே இதனை பார்க்கமுடிகிறது.*

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

# கொழும்பு துறைமுக மனிதப் புதைகுழியின் அகழ்வு பணி நிறைவு!



கொழும்பு துறைமுகத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட மனித உடல்கள் மீட்கப்பட்ட புதைகுழியின் அகழ்வாய்வுப் பணிகள் நிறைவடைந் துள்ளதாக நீதிமன்றத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு நகரின் உயர் பாதுகாப்பு வலயத்தில் ஜனாதிபதி ரணில் விக்மசிங்கவின் ஆட்சிக் காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட புதைகுழி தொடர்பான வழக்கு, 2025 ஒக்டோபர் 13 திங்கட்கிழமை கொழும்பு நீதவான் கசுன் காஞ்சன திசாநாயக்க முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மனித புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட மனித எலும்புகள் குறித்து வைத்திய பகுப்பாய்வை ஆரம்பிக்குமாறு விசேட சட்ட வைத்திய அதிகாரி சுனில் ஹேவகேவுக்கு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

நீதிபதி 2025 நவம்பர் 28 ஆம் திகதி வழக்கை மீண்டும் விசாரிக்க திகதி நிர்ணயித்துள்ளார். கொழும்பு

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

## ஆசிரியர் தலையங்கம்

இலக்கு

# ஈழத்தமிழர்களை ஒன்றுசேர்ந்து போராட அழைக்கிறது 2025ம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு

இஸ்ரேல் பாகிஸ்தான் கம்போடியா பிரதமர்கள் அமெரிக்க அரசுத்தலைவர் டொனால்ட் ட்ரம்ப் அவர்களுக்கு அமைதிக் கான 2025ம் ஆண்டு நோபல் பரிசு கொடுக்கப்பட வேண்டுமென்று முன்மொழிந்த நிலையில், மொத்தம் 244 தனியாட்களும் 94 அமைப்புக்களுமாக 338 வேட்பாளர்களாக இருந்த சூழலில், வெனிசுலாவில் கால் நூற்றாண்டுண்டுக்கு மேலாகத் தளராது சனநாய ஆட்சியை உறுதிப்படுத்தப் போராடி வருபவரும், இவ்வாண்டு அக்டோபர் 7ம் திகதியுடன் 58 வயது நிரம்பியவருமான மரியா கொரினா மச்சடோ அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

வெனிசுலாவில் சனநாயக அரசாங்கமென்ற போர்வையில் 1991 முதல் கியூகோ சாவேசும் 2013 முதல் இன்றுவரை நிக்கோலஸ் மதுரோவும் பாராளுமன்ற சர்வாதிகார ஆட்சி நடாத்துகின்றார்களென இந்த சர்வாதிகார ஆட்சிக்கு எதிராக, 'இன்டஸ்ரியல் பொறியியலாளரான மச்சடோ "நம் குழந்தைகளுக்காக! பசியும் பயமும் இல்லாத வெனிசுலாவுக்காக" என்ற தொனிப்பொருளுடன் 1992 இல், 'வீதியில் வாழும் குழந்தைகளுக்கான' அடீனியா அறக்கட்டளையை நிறுவி, கையில் மரியன்னையின் செபமாலையை ஏந்தியவாறு ஆன்மவிடுதலை போராட்டத்தையும் சமுக விடுதலைப் போராட்டத்தையும் ஒருங்கே தொடங்கினார். 2002 இல் 'சனநாயகத்தினைச் சீர்திருத்தங்கள் மூலமாக அல்ல முற்று முழுதான ஆட்சி மாற்றத்தின் மூலம் உறுதிப்படுத்த வேண்டும். சனநாயகம் அமைதிக்கான முன்நிபந்தனை, சுதந்திரம் வழங்கப்படுகிற ஒன்றாக மாற்றப்பட விடக்கூடாது, எதிர்க்கட்சிகள் உட்பட மக்களை ஒன்றாகச் சேர்த்துப் போராடுவதன் மூலம் உண்மையான சனநாயகத்தை அடைய வேண்டும்' என்னும் தெளிவான சிந்தனைகளுடன் அரசியல் விடுதலைப் போராட்டத்தை மச்சடோ முன்னெடுத்தார். ஸ்பானிய மொழியில் "ஒன்றாகச் சேர்த்தல்" என்னும் பொருள் தரும் 'சொமாட்டோ' என்னும் பெயரையே தனது அரசியல் கட்சிக்கான பெயராகவும் அமைத்துக் கொண்டார். 'துப்பாக்கிச் சன்னங்களை வாக்குகளால் வெல்லுதல்' தனது போராட்ட முறைமை (It is a choice of ballots over bullets) என்ற உள்ள உறுதியுடன் அரசியல் களமிறங்கிய மச்சாடோ, தனது 'சொமாட்டோ' அமைப்பின் மூலம் செயற்பாட்டுத் திட்டங்களையும் பயிற்சிகளையும் உருவாக்கி தேர்தல்களை நேர்மையான முறையில் நடத்துவிக்கும் கண்காணிப்பாளர்களாக மக்களையே உருவாக்கினார்.

இதுவே இவரை 2010 இல் வெனிசுலாவின் தேசிய சபைக்கு மக்களைத் தெரிவு செய்ய வைத்தது. ஆயினும் 2014இல் ஆளுங்கட்சியால் தேசிய சபையிலிருந்து இவர் வெளியேற்றப்பட்டு 15 ஆண்டுகள் தேர்தல்களில் போட்டியிடத் தடையும் பெற்றார். ஆயினும் தளராது 2024 அரசத்தலைவர் தேர்தலில் எட்மண்டோ கொன்சாலஸ் அவர்களுக்கு மச்சோடா ஆதரவு அளித்து அவர் 92 வீதமான வாக்குகளைப் பெற்றார் என இவரது"சொமாட்டோ" குடிசார் அமைப்புக்கள் தமது தேர்தல் கண்காணிப்புக்கள் மூலம் உறுதி செய்தன. ஆயினும் நிக்கோலஸ் மதுரோவுக்கு 51 வீத வாக்குகளும் எட்மண்டோ கொன்சாலேசுக்கு 44 வீதம் வாக்குகளும் கிடைத்தாக ஆளும் ஆட்சியாளர்கள் அறிவித்து நிக்கலோஸ் மதுரோவே ஆட்சியில் தொடரச் செய்துள்ளனர். இதனால் அன்று முதல் இன்று வரை வெனிசுலாவில் நீதிக்கான உண்மைக்கான மக்கள் போராட்டம் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. ஆயினும் மச்சோடா உயிருக்கான இனங்காணக்கூடிய அச்சத்தால் கரந்து வாழ்ந்த நிலையில் மக்களைச் செயற்படுத்தி வருகின்றார். அதேவேளை மச்சாடோ வெனிசுலாவின் ஊழல்நிறைந்த சோசலிச பொருளாதாரத்தைச் சந்தைச் சுதந்திரத்துடன் கூடிய தனியார் முதலாளித்துவ பொருளாதார வளர்ச்சி மூலம் மாற்றுவதைப் பொருளாதார விடுதலைக்கான பாதையாக முன்மொழிந்து வருவதால், அமெரிக்க மற்றும் மேற்குலக நாடுகளின் ஆதரவைப் பெற்றவராகவும் இவர் காணப்படுகின்றார். இவருக்கு அமைதிக்கான நோபல் பரிசு இவ்வாண்டில் வழங்கப்பட்டதை தனக்கானதாக இல்லாமல் தானும் ஒரு பங்காளியாக இருக்கும் பிரமாண்டமான மக்கள் அமைப்புக்கு கிடைத்த பரிசாகவே இவர் வெளிப்படுத்தியுள்ளமை இவரின் பணியாள் தலைமைத்துவப்பண்பை உலகுக்குத் தெளிவாக்கியுள்ளது.

அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்படுவதில் மேற்குல அரசியல் பின்னணி எப்பொழுதும் உண்டு என்ற வழமையான விமர்சனங்களைக் கடந்து, வெனிசுலாவின் எண்ணெய் வள கனிம வள கவர்ச்சியால் உலக அரசுக்களின் அக்கறை வெனிசுலாவில் இருக்கும் நிலைகளையும் கடந்து, படைபலத்துடன் சர்வாதிகார ஆட்சியினைப் பாராளுமன்றக் கொடுங்கோன்மை ஆட்சியாக வெளிப்படுத்தும் சூழலை எதிர்கொள்ளும் மக்கள், எவ்வாறு சுதந்திரத்தை 'வழங்கப்படும் ஒன்றாக மாறவிடாது மக்கள் ஒன்று சேர்ந்து அடைய வேண்டியவொன்றாக' பெற வேண்டுமென்ற மச்சடோவின் உள்ள உறுதியும், அதனைச் செயற்படுத்துவதற்கான ஆளணிகளை அவர் உருவாக்கி அவர் செயற்பட்டு வரும் முறைகளும், இந்த அமைதிப்பரிசு அவருக்கு ஏற்புடையது என்பதனை உறுதி செய்கிறது. அத்துடன் ஈழத்தமிழர்களுக்கும் அவர்கள் இன்று எவ்வாறு தங்கள் மேல் 77 ஆண்டுகளாகத் தொடரும் சிறிலங்காப் பாராளுமன்றக் கொடுங்கோன்மைக்கு எதிராக இன்று போராட வேண்டுமென்ற முறையியலையும் வெளிப்படுத்துகின்றது என்பது இலக்கின் எண்ணமாகவுள்ளது.

வெனிசுலாவில் 33 ஆண்டுகள் சனநாயகத்தை பாதுகாக்கப் போராடுபவர்களுக்கு 2025இல் நோபல் அமைதிப் பரிசு வழங்கும் உலகம் 77 ஆண்டுகள் போராடும் ஈழத்தமிழர்களுக்கு 2025இல் சிறிலங்கா இழைத்த-இழைக்கும் இனஅழிப்புகளுக்கான அனைத்துலகச் சட்டப்பாதுகாப்புக்கும், அனைத்துலக நீதிமன்ற நீதிக்கும், இதுவரை எதுவுமே செய்யாதிருப்பதை ஈழத்தமிழர்கள் உலக மக்களுக்கு உரிய முறைகளில் வெளிப்படுத்த வேண்டுமென்பது இலக்கின் அழைப்பாகவுள்ளது. மேலும் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பில் சிறிலங்காவுக்கான தண்டனை நீதிக்கும் பாதிப்புற்றவர்களினதும் கிட்டிய குடும்ப உறுப்பினர்களதும் பரிகாரநீதிக்கும் ஈழத்தமிழர்களை சிறிலங்காவின் உள்ளக பொறிமுறைக்குள் பெறும்படி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையகம் இவ்வாண்டில் நெறிப்படுத்தி தான் சிறீலங்காவுக்கு அதனது திட்டங்களுக்கான நிதியும் மதியும் அளிக்கும் அமைப்பாகத் தன்னை வெளிப்படுத்தியுள்ளது. இந்நிலையில் பெயரளவில் பாதிக்கப்பட்டவர்களின் சாட்சியங்களைத் தாங்கள் தொடர்ந்தும் இரண்டு ஆண்டுகளுக்குப் பதியப்போவதாகவும் சிறிலங்காவை பொறுப்புகூறவைக்கும் கண்காணிப்பை மேற்கொள்ளப் போவதாகவும் கூறுவது வெளியக விசாரணைக்கு வழிசெய்யாதவரை எந்த நடைமுறை நீதியையோ அல்லது பரிகாரத்தையோ ஏற்படுத்தாது என்பதே உண்மை.

மேலும் பொருளாதாரத்துக்கான நோபல் பரிசு, அழித்தலுக்கான படைப்பாக்கத்தின் மூலம் நீடித்த வளர்ச்சிகளை ஏற்படுத்துவதற்கான கொள்கையினை விளக்கிய பிலிப் ஆகியான், மற்றும் பீட்டர் ஹொவிட் ஆகியோருக்கு அரைவாசிப் பரிசும் தொழில்நுட்ப முன்னேற்றத்தின் மூலம் நீடித்த பொருளாதார வளரச்சிக்கான அடிப்படைக் காரணிகளை கண்டறிந்த ஜோயல் மோக்யருக்கும் வழங்கப்பட்டுள்ளது. இதில் இரண்டு விடயங்களை ஈழத்தமிழர்கள் மனதிருத்த வேண்டும். பொருளாதார வளரச்சிகள் காலத்துடனும் இடத்துடனும் சம்பந்தப்பட்டன. எனவே இருக்கின்ற பொருளாதார முறைமைகள் தேவைக்கேற்ப அழிக்கப்பட்டுப் புதிய முறைமைகளுக்கு இடங்கொடுக்கப்பட்டாலே வளர்ச்சி ஏற்படும். அடுத்தது இந்த புதிய வளர்ச்சிக்கேற்ப தொழில்நுட்ப அறிவினை வளர்த்தலும் கருவிகளைப் பெறுதல் அல்லது உருவாக்கலும் முக்கியம்.

அவ்வாறே இலக்கியத்துக்கான நோபல் பரிசு ஹங்கேரிய படைப்பாளரான லாஸ்லோ கிராஸ்னஹோர்காய் அவர்களுக்கு வழங்கப்பட்ட பொழுது அவரின் நாவல்கள் ஊழிக்கால பேரழிவுகளை புலம்பலாக இல்லாமல் உணர்வு பூர்வமாகப் பயங்கரவாதத்திற்கு மத்தியிலும் கலைத்துவ உயிர்ப்புடன் பதிவுசெய்துள்ளமைக்கும், அவருடைய நாவல்கள் முற்றுப்புள்ளி இடப்படாத மிக மிக நீண்ட நாவல்களாக கருத்துக்களை வளர்க்க அமைந்து படைப்பின் ஆழத்தை வெளிப்படுத்திய தனித்துவ நடைக்காகவுமே வழங்கப்பட்டன என்ற குறிப்பு உண்டு. சிறிய வசனங்களாக படைப்புக்கள் அமைய வேண்டுமெனவும் இலக்கண பிழைகளின்றி அமைய வேண்டுமெனவும் தமிழ்படைப்புலகில் நிலவும் கருத்து எவ்வளவு தவறானதென்பதை இம்முறை இலக்கிய நோபல் பரிசு தமிழருக்கு உணர்த்தியுள்ளது. இவரின் Herscht 07769 என்னும் நாவல் 400 பக்கங்கள் கொண்டது. ஆனால் அரைத்தரிப்புக்களாலேயே படைக்கப்பட்டு 400 பக்கங்களுக்குப் பின்னரே முற்றுப்புள்ளி இடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

படைப்பாளரின் சுதந்திரத்தை தாங்கள் நினைத்த மாதிரி பிச்செடுக்கும் பழக்கம் உள்ளவர்களாக ஈழத்து மரபு மற்றும் தூய்மையை மொழியில் பேணுபவர்களுக்கு உலகம் எவ்வாறு எதனை மதிக்கிறது என்பதை இந்த ஆண்டு இலக்கியத்துக்கான நோபல் பரிசு தெளிவாக்கியுள்ளது. இவ்வாறே மருத்துவ வேதியல் இயற்பியல் நோபல் பரிசுகளும் உலகம் தொழில்நுட்ப எழுச்சிகளுக்கும் பொருளாதார வளர்ச்சிகளுக்கும் எவ்வாறு முதலிடம் கொடுக்கின்றன என்பதைத் தெளிவாக்குகின்றன. ஈழத்தமிழர்கள் இவற்றை கவனத்தில் எடுத்து உலக நடையறிந்து ஒழுகுதல் என்னும் ஒப்புரவு தன்மையில் தங்களை வளர்த்து ஊடகத்துறையில் இலக்கியத்துறையில் அதனை நிலைநிறுத்தினாலே ஈழத்தமிழர்களின் வாழ்வின் எதார்த்தத்தை உலகம் கண்டு அவர்களுக்கான விடுதலை வாழ்வில் கைகொடுக்கும் என்பது இலக்கின் இவ்வாரக்கருத்தாகவுள்ளது.

**ஆசிரியர்**

# பிரதமர் ஹரிணி; ஜே.வி.பி; இராஜதந்திரம்



விதுரன்

பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவின் அண்மைய சீனா மற்றும் இந்தியாவுக்கான தொடர் விஜயங்கள், இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் நிலவும் புவிசார் அரசியல் போட்டிச்சூழலில் அநுரகுமார தலைமையிலான அரசாங்கம் நுட்பமான முறையில் ‘சமநிலை இராஜதந்திரத்தை’ காண்பிப்பதாக உள்ளது.

அதுமட்டுமன்றி பிரதமர் அமரசூரியவின் சீன, இந்திய பயணங்கள், இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு உதவுவதோடு மட்டுமல்லாமல், தற்போதைய அரசாங்கத்தை வழிநடத்தும் ஜே.வி.பி.க்குள் ஒரு மாற்றுத்தலைமைத்துவத்தை கட்டியெழுப்பும் முயற்சிகளாகவும் பார்க்கப்படுகின்றன.



பிரதமர் அமரசூரியவால் ஒக்டோபர் 13-14 ஆம் திகதிகளில் மேற்கொள்ளப்பட்ட சீன விஜயத்தின்போது, பிரதமர் ஹரிணி அமரசூரியவுக்கு, சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங், பிரதமர் லீ கியாங் மற்றும் வாங் ஹுனிங் ஆகியோருடனான சந்திப்புக்களை நடத்துவதற்கான வாய்ப்புக் கிடைத்திருந்தது.

அரசாங்கத்தின் பிரதான அதிகார மையமாகக் கருதப்படும் ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வாவுக்கு இச்சந்திப்புகள் கிடைக்காத நிலையில், பிரதமருக்கு அளிக்கப்பட்ட இந்த உயர்மட்ட வரவேற்பு கவனிக்கத்தக்கது.

சீனப் பிரதமருடனான கலந்துரையாடல்களின் போது, இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு சீனா தொடர்ச்சியான ஆதரவை வழங்குவதாகவும், மண்டலம் மற்றும் பாதை முன்முயற்சியின் (பி.ஆர்.ஐ) கீழ் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த விரும்புவதாகவும் உறுதியளிக்கப்பட்டது.

இதற்குப் பதிலடியாக, பிரதமர் அமரசூரிய இலங்கையின் மிக முக்கியமான இராஜதந்திர நிலைப்பாடாக, சீனாவின் ‘ஒரு சீனா கொள்கைக்கு’ *(One China Policy)* தனது அரசாங்கத்தின் திடமான ஆதரவை மீண்டும் உறுதிப்படுத்துவதாக குறிப்பிட்டார்.



மேலும், ஸிஸாங் மற்றும் ஷின்ஜியாங் விவகாரங்களில் சீனாவுக்குச் சார்பான நிலைப்பாட்டை எடுத்தமை, பொருளாதாரத் தேவைகளுக்காகச் சீனாவிடமிருந்து அரசியல் ஆதரவைப் பெறும் இலங்கையின் அவசியத்தை கடந்து, ‘அதிகாரப்பகிர்வு’ சம்பந்தமாக பாரிய கேள்விகளை எழுப்புவதாக உள்ளது.

தமிழர்களைப் பொறுத்தவரையில் ஏழு தசாப்தமாக ‘அர்த்தமுள்ளஅதிகாரப்பகிர்வுதேவை’ என்பதற்காக போராட்ட வடிவங்களை மாற்றி இன்றும் போராடிக்கொண்டிருக்கின்றார்கள்.

இடதுசாரித்துவ சித்தாந்தக் கட்சியாக இருந்தாலும் ஜே.வி.பி. சிங்கள தேசியவாதத்திற்குள் மூழ்கித்திளைத்திருக்கும் சக்தியொன்றுதான். அத்தகைய கட்டமைப்புக்குள் பிரதமர் அமரசூரிய போன்றவர்கள் ‘புதிய லிபரல்வாத நிலைப்பாடுடையவர்கள்’ என்றே காண்பிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள்.

அத்தகைய நிலையில், பிரதமர் அமசூரியவே, ஒரு சீனக்கொள்கையை ஆதரித்து நிற்பதும், ஸிஸாங் மற்றும் ஷின்ஜியாங் விவகாரங்கள் சீன மத்திய அரசாங்கத்தினை ஆதரித்திருப்பதும் வெறுமனே சீனாவை சாந்தப்படுத்துவதற்கு அப்பால் ஆழமாக கவனிக்க வேண்டிய விடயமாகின்றது.

இதேநேரம், சீனாவின் ஆராய்ச்சிக்கப்பல்கள் இலங்கைக் கடற்பரப்பில் அனுமதி கோருவது தொடர்பான விடயத்தில் இலங்கை இன்னும் தீர்க்கமான முடிவை எடுக்காமல் தவிர்த்து வருகின்றது. இந்த நிலைமையானது இந்தியாவுடனான பாதுகாப்பு அக்கறைகளில் இலங்கை அதிகமாக கரிசனைகளைக் கொண்டிருப்பதாக காண்பிக்கும் செயற்பாடொன்றாகும்.

அத்தகைய சூழலில் பிரதமர் ஹரிணி அமரசூரிய சீன விஜயத்தினை நிறைவு செய்து கொண்டு வெறும் 12 மணித்தியாலங்களுக்குள்ளேயே இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டது, பிராந்திய ஸ்திரத்தன்மைக்கு இந்தியாவின் இன்றியமையாத பங்களிப்பை இலங்கை ஏற்றுக்கொள்வதைப் பிரதிபலிப்பதாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் நடைபெற்ற சந்திப்பில், கல்வி, ஆளணி அபிவிருத்தி, டிஜிட்டல் தொழில்நுட்பம், டிஜிட்டல் நிர்வாகத்தை வலுப்படுத்துதல் போன்ற மக்கள் நலன் சார்ந்த துறைகளில் இந்தியாவின் ஆதரவு குறித்துக் கவனம் செலுத்தப்பட்டது.



குறிப்பாக, பிரதமர் அமரசூரிய டெல்லி பல்கலைக்கழகத்தின் இந்து கல்லூரிக்கு விஜயம் செய்து, தனது பழைய நினைவுகளை மீட்டெடுத்ததும், தனது பெயரை ஆய்வகத்திற்குச் சூட்டியதும், இராஜதந்திர உறவுகளுக்கு அப்பாற்பட்ட தனிப்பட்ட மற்றும் கலாசாரப் பிணைப்பை வலுப்படுத்தும் இந்தியாவின் தந்திரோபாய அணுகுமுறையை *(People-Centric Diplomacy)* வெளிப்படுத்துகிறது.

இதேபோல, இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா மற்றும் ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா ஆகியோர் சந்தித்து, மலையக மக்களுக்கு வீடுகளை வழங்கும் திட்டத்தின் வெற்றியைப் பற்றிப் பேசியமை, இந்தியாவின் இராஜதந்திரம் அரசாங்கத்தின் அனைத்து மட்டங்களிலும் ஊடுருவுவதை காண்பிப்பதாக உள்ளது

பிரதமரின் இந்த விஜயங்களின் மிக

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

# இந்தியாவில் திராவிடர்களின் தனிநாடும்..! இலங்கையில் தமிழர்களின் தனிநாடும்..!



பா. அரியநேத்திரன்

திராவிட சக்திகளுடன் இந்தியாவை பிரித்து தனிநாட்டை விரும்புவதாக மணிசங்கர் ஐயர் ஒருகருத்தை கூறியுள்ளார் . முதலில் யார் அந்த மணி சங்கர் ஐயர் என்பதை பார்ப்போம்.

தஞ்சாவூர் மாவட்டம் திருவையாறு அருகே உள்ள காருகுடி கிராமத்தை பூர்வீகமாகக்கொண்ட இவர் லாகூரில் 1941ஏப்ரல்10ல் பிறந்தார். அகில இந்திய காங்கிரஸ் உறுப்பினராகவும், அகில இந்திய காங்கிரஸ் செயலாளராகவும்1991-1999- 2004 ஆகிய மூன்றுமுறை மயிலாடுதுறை தொகுதியிலிருந்துதேர்ந்தெடுக்கப்பட்டு நாடாளுமன்ற உறுப்பினராக மணிசங்கர் ஐயர் 2004தொடக்கம் 2009 வரை மத்திய எண்ணெய் வளத்துறை அமைச்சராகவும் பணியாற்றியுள்ளார். தற்போது நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப் பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.



இவ்வாறான வரலாற்றைக்கொண்ட இந்தியா வின் மூத்த அரசியல் வாதியான மணி சங்கர் ஐயரின் தற்போதைய திராவிடர்களை கொண்டு தனிநாடு அமைவதற்கான கருத்து இந்திய அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தக் கூடியதாகவே பார்க்கலாம்.

தற்காலத்தில் திராவிடர்கள் செறிந்து வாழும் பகுதி, தென்னிந்தியாவில் விந்திய மலைக்குத் தெற்கேயுள்ள பகுதியாகும். இலங்கையின்வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளும் திராவிடர்களின் தாயகங்களில் ஒன்றாகத் திகழ்கின்றது. மத்திய இந்தியா, வட இந்தியா, பாகிஸ்தான், நேபாளம் போன்ற பகுதிகளிலும் சிறிய அளவில் பாரம்பரியமாக வாழும் திராவிடர் காணப்படுகின்றனர்.

வட இந்தியாவில் வாழும் திராவிடர்களை கொண்டே தனிநாடு அமைப்பதற்கான கருத்தை மணிசேகர் ஐயர் கூறியிருக்கலாம்.

இந்தியாவில் தனிநாடு சாத்தியமா என்பது கடினமான கேள்வி. அரசியலமைப்புச் சட்டத்தின்படி இந்தியாவில் பிரிவினை சாத்தியமில்லை. இருப்பினும், பல்வேறு அரசியல் குழுக்களும், சமூகக் குழுக்களும் தனிநாடு கோரிக்கைகளை எழுப்பி வருகின்றன. இந்தக் கோரிக்கைகள் பொதுவாக அரசியல், சமூக, மற்றும் பொருளாதார காரணங்களுக்காக எழும்புகின்றன, ஆனால் தேசிய அளவில் தனிநாடு இயக்கம் வலுவான ஆதரவைப் பெற்றதாகத் தெரியவில்லை.



ஈழத்தில் தனிநாட்டுக்கோரிக்கை வலுப்பெற் றதை போன்று இந்தியாவில் எந்த மாநிலங்களிலும் தனிநாட்டுக்கோரிக்கை வலுப்பெறவில்லை வெறும் செய்திகளாக மட்டும் வந்து செல்லக்கூடிய ஒன்றாகவே உள்ளது.

தனிநாடு கோரிக்கையின் அடிப்படைகள் வரலாறு, மொழி, கலாசாரம் போன்ற காரணிகளை அடிப்படையாகக் கொண்டு தனிநாடு கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன. சில குழுக்கள் தங்கள் தனித்துவமான அடையாளத்தை நிலைநாட்ட இது அவசியம் என்று கருது கின்றன. அரசியலமைப்பு ரீதியிலான தடைகள் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி, எந்தவொரு மாநிலமும் இந்தியாவிலிருந்து பிரிந்து செல்ல அனுமதி இல்லை.

பிரிவினை கோரிக்கைகளுக்கு எதிராக அரசியலமைப்புச் சட்டம் இருப்பதால், பிரிவினை என்பது மிகவும் கடினமான ஒன்றாகும். தேசிய ஒருங்கிணைப்பு பல இனங்கள், மொழிகள், மற்றும் கலாசா ரங்களை கொண்ட இந்தியா போன்ற ஒரு நாட்டில், தனிநாடு கோரிக்கைகள் நாட்டின் ஒருமைப்பாட்டிற்கும், நிலைத்தன்மைக்கும் பெரும் சவாலாக அமைகின்றன. இதனால், தனிநாடு இயக்கம் வலுவான தேசிய ஆதரவைப் பெறவில்லை.

வலுவானதேசியஅடையாளம்இந்தியர்கள் பல்வேறு மாகாண, கலாசார அடையாளங்களைக் கொண்டிருந்தாலும், அவர்களிடையே ஒரு வலுவான தேசிய அடையாளம் உண்டு. இது, தனிநாடு கோரிக்கைகளை வலுவிழக்கச் செய்கிறது. உலகின் பல மூலைகளில் இந்தியர்கள் வாழ்ந்தாலும், அவர்கள் இந்தியர்கள் என்ற உணர்வை விட்டுக் கொடுக்கவில்லை. நாம் இந்தியர் என்ற உணர்வுடனே சகல மாநில மக்களும் வாழ் கின்றனர். இலங்கையில் ஈழத்தமிழர்களுக்கு நாம் இலங்கையர் என்ற உணர்வு கடந்த 77, வருடங்களாக இருந்ததில்லை.

இந்தியா ஒன்றிணைக்கப்பட்ட நாடு ஆகும். ஒன்றுபட்ட நாடு கிடையாது.பல வித்தியாசமான மாநில கலாசாரங்கள் மற்றும் மொழிகளால் பிரிந்து வாழும் மக்களை ஒன்றிணைப்பது இந்தியா அல்லது பாரதம் என்றழைக்கப்படும் நாட்டின் மீது உண்டாக்கப் பட்ட தேசபக்தி மட்டுமே.

இன்றைய உலகில் “ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு” என்பதற்கு மறு கருத்து கிடையாது என்றாலும் இப்போது உள்ள நிலைமை மாறுவது கடினம்.780 க்கும் மேலான மொழிகள் பேசும் 140 கோடி மக்கள் தாமாக ஒருமனதாக ஒன்றுபடுவது சாத்தியம் இல்லை. ஒன்றிணைப்பதே நல்ல வழி என்ற கருத்துடனேயே பல மாநிலங்கள் அங்குள்ளன.

மணிசங்கர் ஐயர் இப்போது இந்தியாவில் தனிநாடு ஒன்றை திராவிடசக்திகளுடன் இணைந்து அமைக்க முற்படுவதற்கு சிந்தித்திருப்பதற்கு முன்னர் இலங்கையில் வடக்கு கிழக்கை தனிநாடாக தமிழீழம் மலர வேண்டும் என்ற பிரகடனத்தை 1976 மே 14 ல் வட்டுக்கோட்டையில் தந்தை செல்வா நிறைவேற்றிய பின்னர் ஈழத்தமிழ் இளைஞர்கள் 36 விடுதலை இயக்கங்களாக ஆயுதப்போராட்டத்தில் ஈடுபடுவதற்காக அனேகமான விடுதலை இயக்கங்களுக்கு தஞ்சம் வழங்கி பயிற்சி கொடுத்து ஆயுதங்களை வழங்கிய நாடு இந்தியாதான் அதில் மாற்றுக்கருத்துகள் இல்லை.



அப்போது இந்தியப்பிரதமராக இந்திரா காந்தி ஆட்சியில் இருந்தபோது பல உதவிகளை வழங்கினாலும் அவருடைய மறைவுக்குப் பின்னர் அவரின் மகன் ராஜீவ் காந்தி பாரதப்பிரதமராக ஆட்சியில் இருந்த காலத்தில்தான் 1987 யூலை,29, ல் இலங்கை இந்திய ஒப்பந்தம் இலங்கை ஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்தனவுக்கும் அவருக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்டு இணைந்த வடகிழக்கில் ஒரேயொரு மாகாணசபை தேர்தலை மட்டும் நடத்தியபின்னர் 2006ல் இணைந்த வடகிழக்கை சட்ட ரீதியாக மகிந்தராஷபக்ஷ ஆட்சிக்காலத்தில் தற்போதைய தேசிய மக்கள் சக்தி அப்போதைய

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

# சத்தியாக்கிர போராட்டத்தை ஒய்வின்றி தொடரும் முத்து நகர் விவசாயிகள்

கிண்ணியான்





தமிழர் தாயகப் பரப்பில் மக்களின் நில அபகரிப்பு என்பது தொடர்ந்த வண்ணமே உள்ளது.அரச தரப்பில் உள்ள திணைக்களங்களான தொல் பொருள் திணைக்களம், வனஜீவராசி பாதுகாப்பு திணைக்களம், சுற்றுலா பணியகம், இலங்கைதுறை முக அதிகாரசபை என இவ்வாறாக குறிப்பிட்டு சொல்ல கூடிய நிறுவனங்கள் மக்களின் காணிகளை அடாத்தாக அபகரித்து வருகின்றன.

இவ்வாறான நிலையில் திருகோணமலை முத்து நகர் விவசாயிகளின் விவசாய நிலங்களும் இலங்கைதுறை முக அதிகாரசபையின் ஏற்பாட்டில் சூரிய மின் சக்தி உற்பத்திக்காக சுமார் 800 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட காணி அபகரிக்கப்பட்டு தனியார் கம்பனிகளுக்கு இரு விவசாய நீர்ப்பாசன குளங்களை மூடி வழங்கப்பட்டுள்ளது. இங்கு 352 விவசாய குடும்பங்களும் விவசாயத்தை நம்பி பரம்பரை பரம்பரையாக சுமார் 53 வருடங்களாக நெற் செய்கை உள்ளிட்ட விவசாய செய்கையில் ஈடுபட்டு வந்துள்ளனர்.



அரசின் இந்த செயலால் வாழ்வாதாரத்தை இழந்த குறித்த விவசாயிகள் பல வடிவங்களில் போராட்டத்தை நடத்திய போதிலும் எவ்வித சாதகமான முடிவுகளும் எட்டப்படவில்லை. இதனால் மனமுடைந்து போன முத்து நகர் விவசாயிகள் திருகோணமலை மாவட்ட செயலகம் முன்பாக தொடர் சத்தியாக் கிரக போராட்டத்தை இன்றுடன் (18.10.2025) 33 ஆவது நாளாக முன்னெடுத்து வருகின்றனர்.

இது தொடர்பில் “விவசாயிகளிடமிருந்து கொள்ளையடித்து கம்பனிகளுக்கு வழங்கப்பட்ட முத்து நகர் விளை நிலங்களை உடனடியாக திருப்பிக் கொடு போன்ற பிரதான பதாகையை ஏந்தியவாறும் கொழும்பு ஜனாதிபதி செயலகம், பிரதமர் செயலகம் வரை போராட்டத்திலும் ஈடுபட்டிருந்தனர்.

இந்த நிலையில் போராட்டத்தின் போது அப்பாவி விவசாயிகளை காவல்துறையினர் கைது செய்து வருகின்ற நிலையில் அவர்களின் அன்றாட வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளது.

குறித்த விவசாயிகளுக்காக தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் திருகோணமலை மாவட்டத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் பிரதியமைச்சர் மக்களுக்கு ஆதரவாக மட்டுமன்றி ஏனைய வளச் சுரண்டல்களுக்கு எதிராக கடந்த கால ஆட்சியாளர்களை குற்றம் சாட்டி மக்களின் காணிகளை இந்திய கம்பனிகளுக்கு தாரை வார்க்கின்றனர் என பேசிய வரலாறுகளும் உண்டு. அதே நேரம் ஜனாதிபதி தேர்தல் மற்றும் பொது தேர்தலிலும் தேசிய மக்கள் சக்திக்காக முத்து நகர் விவசாயிகள் அவர்களின் கிராமத்தினுள் ஆதரவாக வாக்களித்தும் இருந்தனர்.

ஆனால் காணி அபகரிப்புக்கு எதிராக போராட்டம் நடத்தும் விவசாயிகளை கடந்த வாரம் சீனக் குடா காவல்துறையினர் கைது செய்து மறு நாள் நீதிமன்றம் ஊடாக பிணை வழங்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

அத்துடன் அகில இலங்கை விவசாய சம்மேளனம், மக்கள் போராட்ட முண்ணனி போன்றவர்கள் இவர்களின் சத்தியாக் கிரகப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கி வந்த போதிலும் முஸ்லீம் சமூகத்தை சேர்ந்த பல சிவில் அமைப்புக்கள் எந்தவொரு அழுத்தமும் அரசாங்க தரப்புக்கு வழங்காமை இருப்பது பெரும் குறைபாடாக உள்ளது. பிரதமர் ஹரினி அமர சூரிய இரண்டாம் கட்டமாக தீர்வினை பெற்றுத்தருவதாக இம் மாதம் 20 ம் திகதி வரை வாக்குறுதி வழங்கியுள்ளார். குறித்த தினத்திற்கு ஓரிரு நாட்களே எஞ்சியுள்ளன.

இது தொடர்பில் முத்து நகர் ஒன்றிணைந்த விவசாய சம்மேளன செயலாளர் திருமதி எஸ். சஹீலா தெரிவிக்கையில், “எவ்வித சாதகமான பதிலும் எங்களுக்கு கிடைக்கவில்லை. 352 விவசாயிகளின்800ஏக்கர்நிலங்களைஅபகரித்துள்ளனர். சுமார் 53 வருடங்களாக விவசாயம் செய்து வந்தோம். இதற்காக எங்களுக்கு மாற்று நிலமாவது தர வேண்டும். மேலும் முத்து நகர் விவசாய காணியைஅண்மித்தகாணிகளைதனியார்நிலங்கள் என ஏழு உரிமையாளர்கள் 272 ஏக்கருக்கும் மேற்பட்டவற்றை உரிமை கோருகின்றனர். இதில் தனியார் காணி என கூறி பொய்யாக உறுதிகளை வழங்கி தாரை வார்த்துள்ளனர். இது தொடர்பில் காணி திணைக்களம் அரசாங்கம் ஊழல் மோசடி தொடர்பில் கவனம் எடுக்க வேண்டும். இது தொடர்பில் அண்மையில் எங்கள் விவசாயிகள் ஒன்பது பேரை கைது செய்துள்ளனர். அவர்களின் மோட்டார் சைக்கிள் இயந்திரம் வழங்கப்படவில்லை .

இவர்களின் காணி உரிமங்களை பரிசீலனை செய்ய வேண்டும் .இதில் ஊழல் மோசடி இடம் பெற்றுள்ளது “எனவும் தெரிவித்தார்.

அரசாங்கம் விவசாயிகளின் பிரச்சினைகளை கண்டு கொள்ளாமலும் தீர்வு வழங்காத நிலையிலும் செயற்படுவதாக இப் போராட்டத்தை வைத்து பார்க்கும் போது புலனாகிறது. ஆட்சிக்கு மாறி மாறி வருகின்ற அரசாங்கம் எந்தவொரு அரசாங்கமாக இருந்தாலும் சிறுபான்மை சமூகத்தின் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வின்றிய நிலை காணப்படுகிறது.

1972 களில் இருந்து அப்போதைய அரசாங்கம் முத்து நகர் விவசாயிகளை வெளியேற்றாத போது தற்போதைய அநுர அரசாங்கம் இந்திய கம்பனிகளுக்கு நீண்ட கால குத்தகை அடிப்படையில் விவசாய நிலத்தை வழங்குவது எந்தளவுக்கு நியாயம் என விவசாயிகள் கேள்வி எழுப்புகின்றனர்.

திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம், பாராளுமன்றம் என விவசாயிகளின் பிரச்சினைகளை பேசிய போதிலும் ஆளும் தரப்பினர் கண்டு கொள்ளாமல் காலத்தை கடத்தி வருகின்றனர்.



இதனால் குறித்த விவசாயிகளின் ஜீவனோபாயமாக விளங்கும் நெற் செய்கை பாதிக்கப்பட்டுள்ளது. தற்போதைய நிலையில் விதைப்பு நடவடிக்கையில் ஈடுபட வேண்டிய காலம்.

இது குறித்து விவசாயியான பாபு தெரிவிக்கையில்,“ விவசாய நிலங்களை பெற்றுத் தரக் கோரியே போராடுகிறோம் .கருத்து சுதந்திரத்தை கூட பிரயோகிக்க முடியாத நிலையில் காவல் துறையினரின் தாக்குதலுக்கு உள்ளானோம். அப்பட்டமான பொய் குற்றச்சாட்டை முன்வைத்து

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

# 1700 ரூபா 1750 ஆனது காணி உறுதி என்ற வெற்றுக் காகிதம்



இலங்கையின் பொருளாதாரத்தில் முக்கிய பங்காற்றும் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கான வேதனம் மற்றும் பெருந்தோட்ட மக்களுக்கான வீடமைப்பு திட்டம் என்பன குறித்த பேச்சு வார்த்தைகளும் கருத்தாடல்களும் காலத்துக்கு காலம் மாற்றமின்றி நீடித்த வண்ணம் உள்ளன. அந்த அடிப்படையில் பெருந்தோட்ட தொழிலாளர்களின் வேதன விடயமும் வீட்டு உரிமை பத்திர விடயமும் மீண்டும் ஒருமுறை பேசு பொருளாக மாறி உள்ளது. அண்மையில் பண்டாரவளையில் ஜனாதிபதியினால் பெருந்தோட்ட மக்களுக்கான காணி உறுதி பத்திரம் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.



இந்த நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு நாளாந்த அடிப்படை வேதனமாக 1750 ரூபா இந்த ஆண்டு இறுதிக்குள் பெற்றுக் கொடுக்கப்படும் என உறுதி அளித்தார். இந்த அடிப்படையில், மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு முன்மொழியப்பட்ட வேதன உயர்வு தொடர்பில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் பெருந்தோட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கு இடையேயான முக்கிய கலந்துரையாடலொன்று இந்த வாரம் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

கடந்த பாதீட்டில் அரச மற்றும் தனியார் துறையினரின் வேதனம் அதிகரிக்கப்பட்டதற்கு இணையாக, பெருந்தோட்டத்தொழிலாளர்களின் நாளாந்த வேதனத்தை உயர்த்துவதற்கான யோசனை குறித்து இந்தக் கலந்துரையாடலில் விரிவாக கலந்துரையாடப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. பெருந்தோட்டத் தொழிலாளர்கள் கண்ணியமாக வாழக்கூடிய போதிய வேதனத்தை வழங்கி, அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இதன்போது வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், இந்த வேதன உயர்வை நடைமுறைப்படுத்துவதற்கான வழிமுறைகள் குறித்தும் அவர் தோட்ட நிறுவனப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடினார். அதேநேரம், பெருந்தோட்டக் கைத்தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்து பெருந்தோட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஜனாதிபதிக்கு விளக்கமளித்தனர். இதன்போது, பெருந்தோட்டத் துறையை மேம்படுத்துவதற்கான அரசாங்கத்தின் கொள்கைகளை ஜனாதிபதி தெளிவுபடுத்தியதுடன், அதற்குத் தேவையான அரசின் உச்சபட்ச பங்களிப்பை வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்தார்.

இந்தச் சந்திப்பை வழங்கியமைக்காக ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்த நிறுவனப் பிரதிநிதிகள், துறையின் முன்னேற்றம் குறித்த தமது கருத்துகளையும், பரிந்துரைகளையும் முன்வைத்தனர் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த கலந்துரையாடலில் பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சர் சமந்த வித்யாரத்ன, தொழில் மற்றும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சர் கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ, தொழில் பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க உள்ளிட்ட அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், அமைச்சுச் செயலாளர்கள் மற்றும் தொழிற்துறை அதிகாரிகள் பங்கேற்றனர். அதே நேரம், முதலாளிமார் சம்மேளனம் உள்ளிட்ட பல முன்னணி தோட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

### இணங்க மறுக்கும் தோட்ட நிறுவனங்கள்

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு இந்த ஆண்டுக்குள் குறைந்தபட்ச தினசரி வேதனமாக 1,750 ரூபா வழங்கப்படும் என்ற ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் அறிவிப்புக்கு, பெருந்தோட்ட நிறுவனங்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.

தற்போதுள்ள 1,350 ரூபாய் நாளாந்த அடிப்படை வேதனத்துடன், மேலும் 350 ரூபாய் அதிகரிப்பது எந்தவொரு உறுதியான பொருளாதாரத் தர்க்கத்தையும் கொண்டிருக்கவில்லை என்று முதலாளிமார் சம்மேளனத்தின் பேச்சாளர் ரொஷான் ராஜதுரை தெரிவித்துள்ளார். ஜனாதிபதியுடனான சந்திப்பு குறித்து ஊடகங்களுக்கு கருத்துரைத்த போது அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார். இந்த வேதன அதிகரிப்பு ஆண்டுக்கு கூடுதலாக 13 பில்லியன் ரூபா சுமையை ஏற்படுத்தும் என்று நிறுவனங்கள் மதிப்பிடுகின்றன.

தற்போதைய நாளாந்த வேதனம் 1,350 ரூபாவாக இருக்கும் நிலையில், ஏல விற்பனையில் ஒரு கிலோ தேயிலையின் விலை 1,083 ரூபாவாக மட்டுமே உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது 2022ஆம் ஆண்டில் ஆயிரம் ரூபாய் தினசரி வேதனம் வழங்கப்பட்டபோது கிடைத்த 1,093 ரூபாவை விடவும் குறைவாகும் என்றும் ரொஷான் ராஜதுரை சுட்டிக்காட்டி உள்ளார்.

பிராந்திய பெருந்தோட்ட நிறுவனங்களில் தற்போதைய தினசரி வேதனம் ஏற்கனவே உற்பத்திச் செலவில் 60 சதவீதத்தை ஆக்கிரமித்துள்ளது. ‘வேதனத்தை அதிகரிக்க நிறுவனங்கள் தயாராக இருக்கின்றன. எனினும் அதற்கான இயலுமை நிறுவனங்களுக்கு இல்லை’ என்று முதலாளிமார் சம்மேளனத்தின் பேச்சாளர் ரொஷான் ராஜதுரை தெரிவித்துள்ளார்.

மருதன் ராம்

தேயிலை உற்பத்தியில் 70 சதவீதத்துக்கும் அதிகமான பங்களிப்பை வழங்கும் மற்றும் சுமார் 5 இலட்சம் தொழிலாளர்களை கொண்டுள்ள சிறு தோட்ட உரிமையாளர்கள், ஏற்கனவே உள்ள 1,350 ரூபாய் வேதனத்தை செலுத்துவதற்கே சிரமப்படுகின்றனர். அவர்களின் உற்பத்திச் செலவு ஒரு கிலோ தேயிலைக்கு சுமார் 1,400 ரூபாவை அண்மித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் வேதன உயர்வு ஏற்பட்டால், அவர்களின் செலவு 1,500 ரூபாவுக்கு மேல் சென்று, அவர்கள் தேயிலை செய்கையிலிருந்து விலகி வேறு பயிர்களை நாடக்கூடும். இது ஒட்டுமொத்தத் துறைக்கும் நீண்ட கால பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் முதலாளிமார் சம்மேளனத்தின் பேச்சாளர் ரொஷான் ராஜதுரை தெரிவித்துள்ளார்.



ஜனாதிபதியின் இந்த முன்மொழிவு, ஒரு வருடத்துக்கு முன்பு உயர் நீதிமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட மூன்று வருட ஒப்பந்தத்தின் கீழ் நாளாந்த வேதனம் 1,350 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்ட பின்னர் முன்வைக்கப்பட்டுள்ளது. நிலைமையின் தீவிரத்தை ஜனாதிபதி புரிந்து கொண்டிருப்பார் என்று நம்புவதாகவும், செயற்றிறன், வருகை மற்றும் சலுகைகள் ஆகியவற்றின் அடிப்படையில் ஒரு புதிய நடைமுறைச் சாத்தியமான திட்டத்தை முன்வைக்க பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனம் தயாராக இருப்பதாகவும் முதலாளிமார் சம்மேளனத்தின் பேச்சாளர் ரொஷான் ராஜதுரை தெரிவித்துள்ளார்.

### எதிர்க்கட்சிகளின் நிலைப்பாடு

பெருந்தோட்ட தொழிலாளர்களின் வேதன விடயத்தில் இவ்வாறான இழுபறி காணப்படும் நிலையில் மறுபுறம் ஜனாதிபதியினால் பண்டாரவளை பகுதியில் வழங்கப்பட்ட காணி உறுதி பத்திரங்கள் வெறும் போலி காகிதங்கள் என்று எதிர்க்கட்சிகள் விமர்சிக்கின்றன. அத்துடன் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கான வேதனம் குறித்தும் எதிர்க்கட்சிகள் விமர்சனங்களை முன்வைத்துள்ளன. இதன்படி, அரசாங்கத்தின்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# ராஜீவ் காந்தியை வீழ்த்தியது எது?

பகுதி 1

1987-ல் ஈழப் பிரச்சினையை முழுமையாகப் புரிந்து கொள்ளாமலேயே, அதைக் கையிலெடுத்தது இந்தியா. எந்தெந்த நோக்கத்துடன் இந்தியா அதில் தலையை விட்டது, எந்தெந்த விதத்தில் பிழை விட்டது என்பதையெல்லாம், சுமார் 35 ஆண்டுகளுக்கும் மேலாக, நாம் விவாதித்து வருகிறோம். இத்தனை ஆண்டுகள் கழித்து, இப்போதுதான், இது தொடர்பில் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் வந்திருக்கிறது. இந்திய தேசிய காங்கிரஸ் தரப்பிலிருந்து!



புகழேந்தி தங்கராஜ்

முக்கியமான தமிழ்த்தலைவர்கள் மற்றும் போராளிக் குழுக்களைப் பற்றிய இந்தியாவின் தவறான புரிதலே அனைத்துக் குளறுபடிகளுக்கும், துயரங்களுக்கும் காரணம் என்கிறது இந்த ஒப்புதல் வாக்குமூலம். இப்படிக் கூறியிருப்பவர், மூத்த காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான ஸ்ரீமான் மணிசங்கர அய்யர். சுப்பிரமணிய சாமி அளவுக்கு 'ஓட்டைவாயர்' இல்லையென்றாலும், இவராலும் வாயை மூடிக்கொண்டு 'சிவனே' என்று சும்மா இருக்க முடியாது. எதையாவது வெளிப்படையாகப் பேசி, பரபரப்பை ஏற்படுத்திவிடுவார். இவர் பேசுவதில் ஓரளவு நியாயமும் இருப்பதால், பரவலாக கவனத்தையும் பெறுகிறது.

INDIAN FOREIGN SERVICE (IFS) பொறுப்பில் இருந்து, தூதரகப் பணிகளில் ஈடுபட்ட அய்யர், ராஜீவ் காந்தியால்தான் அரசியலில் களமிறக்கப்பட்டார். அதற்குக் காரணம், அய்யர் ராஜீவின் DOON SCHOOL நண்பர். அவருக்கு ஜூனியர். விசுவாசி. ராஜீவுடன் மிகவும் நெருக்கமாக இருந்தவர் என்கிற அடிப்படையில், அவரது கருத்து முக்கியத்துவம் பெறுகிறது.

ஏற்கனவே, ராஜீவ்காந்தி படுகொலையில், சந்திராசுவாமி என்கிற ஆன்மீக புரோக்கருக்கும். சுப்பிரமணிய சாமி என்கிற அரசியல் புரோக்கருக்கும் பங்கிருக்கலாம் என்று ஐயங்கள் எழுந்ததுண்டு. ராஜீவ்காந்தி படுகொலைதான். நரசிம்ம ராவை 'திடீர்' பிரதமராக ஆக்கியது. எந்தக் குற்றத்திலும், அந்தக் குற்றத்தால் ஆதாயம் அடைந்தவர்கள் மீது சந்தேகப் பார்வை விழுவது சகஜம். அப்படியொரு பார்வை, நரசிம்மராவ் மீது கூட திருமதி.சோனியா காந்திக்கு இருந்திருக்கிறது என்பதை பல சந்தர்ப்பங்கள் உணர்த்தின. ராவ் மீது சோனியாவுக்கு இருந்த வெறுப்பு ஊரறிந்த ரகசியம்.

இதையெல்லாம் புறந்தள்ளிவிட்டுத்தான், ராஜீவ்காந்தி கொலைப்பழி, புலிகள்மீது 'மட்டுமே' திணிக்கப்பட்டது. அந்த வழக்கை அப்படி ஜோடித்தவர்கள். அதற்காகச் சொன்ன பிரதான காரணம் - இந்திய அமைதி காப்புப் படையினருடன், விடுதலைப் புலிகள் நடத்திய சமர்தான்! சில ஆயிரம் புலிகளே களத்தில் இருந்தாலும், 2 லட்சத்துக்கும் மேலான இந்தியப் படையினருடன், உறுதி குலையாமல் போரிட முடிந்தது. புலிக ளின் அச்சமின்மையின் காரணமாக, இந்திய அமைதிப் படை, மிகப்பெரிய இழப்புடனும், அவமானத்துடனும் இந்தியா திரும்ப வேண்டியிருந்தது. ஆசியாவின் இரண்டாவது பெரிய ராணுவமான இந்திய ராணுவத்தின் வரலாற்றில் அது ஒரு நிரந்தரக் களங்கமாகவே ஆகிவிட்டது. இதற்கு, எதெல்லாம் காரணம் என்பதைத்தான், ராஜீவின் நண்பரான அய்யர் இப்போது விவாதப் பொருளாக்கியிருக்கிறார்.

இலங்கையில் ஏற்படும் சிதைவு, இந்தியாவிலும் சிதைவை ஏற்படுத்தக் கூடும் என்று ராஜீவின் இந்தியா கருதியது'... 'இந்தியாவின் ஒருமைப்பாட்டைக் காப்பாற்ற, இலங்கையின் ஒருமைப்பாட்டைக் காப்பாற்றியாக வேண்டுமென்று கருதப்பட்டது. அதற்கான முன்னேற்பாடே இந்திய இலங்கை ஒப்பந்தம் மற்றும் அமைதிகாப்புப் படை அனுப்பல்! தமிழ்நாட்டில் பிரிவினைவாத உணர்வு எழாதபடி தடுப்பதே அந்த நடவடிக்கையின் நோக்கம்...' என்றெல்லாம் அய்யர் இப்போது செப்பியிருப்பது, ஏற்கனவே பலரும் சொன்னதுதான்.

'இந்திய அமைதி காப்புப் படையின் நடவடிக்கைகளில் பிழை இருந்தது... திட்டமிடல் மற்றும் செயற்படுத்தலில் குறைபாடுகள் இருந்தன..... இந்திய அமைப்பின் சில பிரிவுகள் களத்தைத் தவறாகப் புரிந்து கொண்டன...'

'உள்நாட்டிலும் அண்டை நாட்டிலும் இருந்த ஆலோசகர் கள் மீது ராஜீவ் வைத்திருந்த தவறான நம்பிக்கையே தீங்கு க்கு வழிவகுத்தது.... இந்திய ராணுவமும், உளவுத்துறை யும் அவரை வீழ்த்தின...' - என்கிற மணிசங்கர் அய்யரின் பகிரங்கக் குற்றச்சாட்டுதான், பரபரப்பைக் கிளப்பியிருக்கிறது.



மணிசங்கர் குற்றச்சாட்டின் 'ஹைலைட்' 'முக்கிய போராளிக் குழுக்கள் தொடர்பான இந்தியாவின் தவறான தீர்ப்புகள் துயரத்தை அதிகப்படுத்திவிட்டன' -என்பதுதான்!

1987ல், இந்திய இலங்கை ஒப்பந்தத்துக்கு முன், பிரபாகரனைத் தவறாகப் புரிந்து கொண்டு, டெல்லியில் வீட்டுக்காவலில் (ASHOKA HOTEL) வைத்திருந்தது ராஜீவ் அரசு.'இந்தப் பொடியன்களால் என்ன முடியும்' என்றே உயர் அதிகார வர்க்கம் நினைத்தது. ஆனால், புலிகளின் பலமறிந்த ராஜீவ், கொழும்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கு முன் நாள் இரவு, பிரபாகரனை பிரதமரின் அதிகார பூர்வ இல்லத்துக்கு (7, RACE COURSE ROAD, NEW DELHI) நள்ளிரவில் வரவழைத்துப் பேசினார். வீட்டுக் காவலிலிருந்து பிரதமர் இல்லத்துக்குச் சென்ற பிரபாகரனை, ராஜீவ்காந்தி, வாயிலில் நின்று வரவேற்றதெல்லாம் இயல்பான ஒன்றல்ல. அதற்கும் மேல்!

பிரதமரின் இந்த மனமாற்றம், அதிகார வர்க்கத்தைக் கண்டிப்பாக உலுக்கியிருக்கும். ஏனென்றால், அவர்களில் பலர், இலங்கையின் கூலிப்படை ரேஞ்சுக்கு செயல்பட்டு வந்தவர்கள். 'என்னுடைய சிகார் பைப்பைப் புகைத்து முடிப்பதற்குள் உங்கள் இயக்கத்தை நசுக்கிவிடுவேன்' என்று பிரபாகரனிடமே மிரட்டியவர்கள். அந்தப் பிரபாகரனைத்தான், வாயிலில் நின்று கண்ணியத்தோடு வரவேற்றார் ராஜீவ். இந்த வரலாற்றை யாரும் திரிக்கவோ, மறுக்கவோ முடியாது.

ராஜீவின் மனோபாவம் மாறியதைப் பார்த்து அதிர்ச்சியடைந்த அதிகார வர்க்கம்தான், அவரை வீழ்த்தியிருக்கிறது என்பது மணி சங்கர் குற்றச்சாட்டிலிருந்து தெளிவாகத் தெரிகிறது.

பிரச்சினையைப் பிழையாகக் கையாண்டு, விடுதலைப்புலிகள் மீது தவறான புகார்களை எழுப்பி, புலிகளை இந்தியாவின் எதிர் நிலையில் கொண்டுவந்து நிறுத்துவதிலேயே அவர்கள் குறியாய் இருந்தனர் என்கிற வரலாற்று உண்மையை எடுத்துரைப்பதாக இருக்கின்றன மணிசங்கரின் வார்த்தைகள்.

ஒப்பந்தம் கையெழுத்தான பிறகு, 'தம்பி எங்கே' என்று கேட்ட ஈழத்து மக்கள் முன் பிரபாகரனைக் கொண்டு போய் நிறுத்தியாக வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது இந்தியா. ஆகஸ்ட் 4ம் நாள், சுதுமலையில் நிகழ்த்திய வரலாற்றுப் பேருரையில் 'இந்தியா எங்கள் நண்பன் ' என்று திட்டவட்டமாகத் தெரிவித்தார் பிரபாகரன்.

அது - ராஜீவ், பிரபாகரன் கெமிஸ்ட்ரியின் பிரதிபலிப்பு. நிலைமை சுமூகமாக இருந்தபோது, இந்தியா கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தடையாக இருந்த அதிகாரிகள் யார்? அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றக் கோரி திலீபன் அறப்போரில் ஈடுபட்டபோது, அந்த அகிம்சைப் போரை நிறுத்த மறுத்து 'IT IS NOT MY BUSINESS' என்று சொன்ன அகம்பாவ அதிகாரி யார்? செப்டம்பரில் திலீபன் உயிர்க் கொடை... அடுத்த மாதமே ஒப்பந்தத்துக்கு மாறாக புலேந்திரன், குமரப்பா உள்ளிட்ட மூத்த போராளிகளைக் கைது செய்து, அவர்களைக் கொழும்பு கொண்டு செல்ல திட்டம் வகுத்துக் கொடுத்த மேதாவி யார்? எல்லாக் கேள்விகளுக்கும், 'ஜே.என்.தீட்சித்' என்கிற ஒரே பெயர் பதிலாகிவிட்டது. சிங்களப் பேரினவாதத்தின் கூலிப்படையாய்ச் செயல்பட்ட பல அதிகாரிகள் ஜே.என்.தீட்சித்துடன் சேர்ந்து செயல்பட்டிருக்க வேண்டும். அவர்களின் துரோகம் தான், ராஜீவை வீழ்த்தியது. இதைத்தான் குறிப்பிடுகிறார் மணிசங்கர் அய்யர்.

ஹர்கிரட் சிங் போன்ற, கள நிலவரத்தைத் துல்லியமாய்ப் புரிந்து கொண்ட உயர் அதிகாரிகள் இல்லாமலில்லை. அவர்கள் எண்ணிக்கை மிக

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

# சிறிலங்கா தொடர்பான ஐநா மனிதவுரிமை பேரவையின் 60/1 தீர்மானம் நீதியைப் பெற்றுத் தராது! தமிழர்கள் தம்மை ஒருங்கிணைத்துக் கொள்வதே முதல் பணி!

## ஈழத்தமிழர் வாழ்வுரிமைக் கூட்டமைப்பின் அறிக்கை

ஐ.நா. மனிதவரிமைப் பேரவையின் கூட்டத்தொடர் கடந்த செப்டம்பர் 8 முதல் அக்டோபர் 8 வரை நடைபெற்றது.

தமிழர்களுக்கு எதிராக சிறிலங்கா அரசால் இழைக்கப்பட்ட போர்க்குற்றங்கள், மாந்தக் குலத்திற்கு எதிரான குற்றங்கள், இனவழிப்புக் குற்றங்கள் ஆகியவற்றுக்கு நீதியை உறுதிசெய்யப் பன்னாட்டுப் புலனாய்வு வேண்டும், செம்மணி உள்ளிட்ட மனிதப் புதைகுழிகளை ஆய்வு செய்வதற்கு பன்னாட்டுப் பொறிமுறை வேண்டும் என்று தமிழர்கள் தரப்பில் கோரிக்கை வைக்கப்பட்டிருந்தது.

குறிப்பாக, தமிழ்நாட்டில் ஈழத்தமிழர் வாழ்வுரிமைக் கூட்டமைப்பின் முயற்சியால் மேற்படி கோரிகைகளை வலியுறுத்தி, மதிமுக பொதுச் செயலாளர் வைகோ, விசிக தலைவர் தொல் திருமாவளவன், சிபிஐ தமிழ் மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டிய, தமிழக வாழ்வுரிமைக் கட்சி தலைவர் தி.வேல்முருகன், மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் பேராசிரியர் ஜவாஹிருல்லா, ஐயூஎம்எல் கட்சியின் தேசிய தலைவர் கே.எம். காதர் மொய்தீன், தமிழ்நாடு கொங்கு இளைஞர் பேரவையின் தலைவர் தனியரசு ஆகியோரிடம் இசைவு பெற்றுஐ.நா.மனிதஉரிமைப்பேரவையின் உறுப்பு அரசுகளுக்கு கடிதம் அனுப்பபட்டது.

கடந்தஅக்டோபர்5ஆம்நாள்சிறிலங்காவில் பொறுப்புக்கூறல் மற்றும் மீளிணக்கத்திற்கான 60/1தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.ஆனால், இந்த தீர்மானமும் உள்நாட்டுப் புலனாய்வை வலியுறுத்துகிறதே அன்றி பன்னாட்டுப் புலனாய்வு கோரி ஐ.நா. பாதுகாப்பு மன்றத்திற்கு அனுப்புமாறு ஐ.நா பொதுப்பேரவைக்கு பரிந்துரைக்கவில்லை.

இந்த தீர்மானத்தை இங்கிலாந்து, கனடா, மலாவி, மாண்டிநிக்ரோ, வட மாசிடோனியா ஆகிய ஐந்து நாடுகள் முன்மொழிந்தன. கிட்டத்தட்ட 30 நாடுகள் இந்த தீர்மானத்திற்கு இசைவு தெரிவிப்பதாக கைச்சாத்திட்டதால் வாக்கெடுப்பின்றி இத்தீர்மானம் நிறைவேற்றப் பட்டுவிட்டது. சீனாவும் க்யூபாவும் இத்தீர்மான த்தை எதிர்த்துப் பேசின. இந்தியா தீர்மானத்திற்கு ஆதரவு கொடுக்கவில்லை. ஒருவேளை வாக் கெடுப்பு நடந்திருந்தால் எப்போதும் போல் இந்தியா வாக்கெடுப்பில் பங்கெடுக்காமல் விலகி யிருக்கும்.

இந்த நீர்த்துப் போன தீர்மானத்தையே அநுர தலைமையிலான சிறிலங்கா அரசு ஏற்க மறுத்துவிட்டது. கடந்த 51 ஆவது கூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி சிறிலங்காவின் பொறுப்புக்கூறலுக்கான திட்டம் (Sri Lankan Accountability Project ) என்ற பெயரில் ஓர் அலுவலகம் ஐ.நா. மனிதவரிமைப் பேரவையின் உயர் ஆணையர் அலுவலகத்திற்குள் இயங்கி வருகிறது. அவ்வலுவலகம் மனித உரிமை மீறல்களுக்கான சான்றுகளை திரட்டி, சேகரித்து, பாதுகாத்து வைக்கும் பணியைச் செய்து வருகிறது. தீர்மானத்தின் இந்த பகுதியைத்தான் தொடர்ச்சியாக சிறிலங்கா அரசு எதிர்த்து வருகிறது.

இந்த தீர்மானம் முந்தைய தீர்மானங்களில் இருந்து (30/1(2015), 45/1(2021) 51/1 (2022), 57/1 (2024)) ஒருபடி கீழே இறங்கி விட்டது. இந்த தீர்மானத்தில் முதல் முறையாக "பன்னாட்டு" என்ற சொல் அடியோடு நீக்கப்பட்டுள்ளது. இது பன்னாட்டு உதவியுடனான பொறுப்புக்கூறல் பொறிமுறை என்ற பேரவையின் முந்தைய உறுதிப்பாட்டிலிருந்து பின்வாங்கியதைக் குறிப்பதாகும். 2015 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 30/1 தீரமானம் பன்னாட்டு நீதிபதிகள் பங்கேற்புடனான கலப்பு பொறிமுறை ஒன்றை முன்வைத்தது. ஆனால், பத்தாண்டுகள் கழித்து அதே பேரவையில் முந்தைய நிலைப்பாட்டை மறுத்து உள்நாட்டுப் புலனாய்வு என்று பேசுகிறது.

பயங்கரவாத தடை சட்டம் தமிழர்களுக்கும் முஸ்லீம்களுக்கும் எதிராகத் தான் அதிகம் பயன்படுத்தப்படுகின்றது,காணாமலாக்கப்பட்டோருக்கு இன்னும் நீதி உறுதி செய்யப் படவில்லை, புதைகுழிகளைத்களைத் தோண்டியெடுக்கும் ஆய்வப் பணியில் பன்னாட்டுப் பங்கேற்பு தேவை, நெடுங்காலமாய்த் துப்புத் துலக்கப்படாமல் இருந்துவரும் யாவருமறிந்த வழக்குகள் புலனாய்வு செய்யப்பட்டு வழக்கு தொடுக்கப்பட வேண்டும், பொருளியல் தேவைகளுக்காக தமிழர் நிலங்கள் படையினரால் பயன்படுத்தப்படுகின்றன, சிவில் சமூகப் பெயராளர்களுக்கும் மனிதவரிமைக் காப்பாளர்களுக்கும் இதழாளர்களுக்கும் துயர்ப் பட்டோருக்கும் குடும்பங்களில் உயிர்பிழைத் திருப்பவர்களுக்கும் குறிப்பாகப் பெண்களுக்கும் சிறிலங்காவில் பாதுகாப்பற்ற சூழல் நிலவுகிறது ஆகியவற்றை மனிதவரிமைப் பேரவை ஒப்புக் கொள்கிறது. இவையாவற்றையும் தொகுத்துப் பார்த்தால் வடக்குகிழக்கு வாழ் தமிழர்கள் ஒரு கட்டமைப்பியல் இனவழிப்புக்கு உள்ளாகி வருகிறார்கள் என்ற முடிவக்கு வர முடியும். மென்மேலும் சிறிலங்கா அரசுக்கு கால அவகாசம் கொடுப்பது என்பது கட்டமைப்பு வகைப்பட்ட இனவழிப்பை செய்து முடிப்பதற்கு துணைசெய்யுமே ஒழிய பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தாது.

தலைமை சட்டத் தரணியே வழக்கு தொடுநராக இருப்பதால் அரசின் அழுத்தங்களுக்கு இணங்க வேண்டிய நிலை ஏற்பட வாய்ப்பு உண்டு என்பதால் சுதந்திரமான வழக்குதொடுநர் அலுவலகம் ஒன்றை அமைக்கவிருப்பதாக அநுர அரசு உறுதியளித்துள்ளதை மனிதவரிமைப் பேரவை வரவேற்றுள்ளது. ஆனால் அத்தகைய சுதந்திரமான வழக்குதொடுநர் அலுவலகம் தமிழர்களுக்கு நீதியைப் பெற்றுத்தராது. கிரிசாந்தி வழக்கைத் தவிர கடந்த 30 ஆண்டுகளில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடுமைகளில் தொடர்புடைய ஒருவர்கூட சிறிலங்கா அரசால் தண்டிக்கப்படவில்லை. மேலும் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றங்கள் அமைப்புசார் குற்றங்கள் என்பதை மனிதவரிமை பேரவையால் கொண்டு வரப்பட்ட OISL அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. சிறிலங்காவின் ஒட்டுமொத்த அரச இயந்திரமும் சிங்கள பௌத்த பேரினவாதத்தில் ஊறித் திளைத்ததாக இருப்பதால் தற்சார்பான புலனாய்வு என்பதற்கு உள்நாடில் இடமே இல்லை.

கடந்த 15 ஆண்டுகளாக சிறிலங்காவில் பல்வேறு ஆட்சிகள் மாறிவிட்டன. ஆனால், பொறுப்புக்கூறல் தொடர்பில் எவ்வித முன்னேற்றமும் இல்லை. ஏனெனில் சிறிலங்கா அரசுக்கு தமிழர் களுக்கான நீதியை உறுதிசெய்வதற்கான மனத்திட்பம் இல்லை. ஆயினும் மனிதவரிமை பேரவை உள்நாட்டுப் புலனாய்வை வலியுறுத்திக் கொண்டிருப்பது சிறிலங்கா அரசு மீதான நம்பிக்கையீன் பாற்பட்டு அல்ல. ஐநா அரசுகளின் மன்றம் என்ற வகையில் அதிலுள்ள அரசுகள் தத்தமது புவிசார் நலன்களுக்கு ஏற்ப முடிவ எடுக்கின்றன. எனவே, சிறிலங்காவை அதன் குற்றங்களில் இருந்து பாதுகாப்பதில்தான் தமது புவிசார் நலன்கள் இருப்பதாக பெரும்பாலான அரசுகள் கருதுவதால் இத்தகைய நீர்த்துப் போன தீர்மானங்கள் வருகின்றன.

தமிழர்களைப் பொறுத்தவரை நீதிக்கான போராட்டத்தில் சோர்வடைந்து விட வேண்டியதில்லை. ஈழத்தில் முள்ளிவாய்க்கால் படுகொலைகளுக்கு நீதி கோருவதையும் கட்டமைப்பு வகைப்பட்ட இனவழிப்பை தடுத்து நிறுத்துவதையும் முதன்படுத்தி ஓரணியில் திரள வேண்டும்.

தமிழ்நாட்டிலும் புலம்பெயர் நாடுகளிலும் உள்ள ஈழ ஆதரவு ஆற்றல்கள் தத்தமது அரசுகளை ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக திருப்புவதில் முழு ஆற்றலையும் பயன்படுத்த வேண்டும். குறிப்பாக, தமிழ்நாட்டில் ஈழ ஆதரவு அரசியல் வலுப்பெற்றால்தான் இந்திய அரசின் நிலைப்பாட்டை மாற்றியமைக்க முடியும். இந்திய அரசின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படாமல் மேற்குலக நாடுகளின் நிலைப்பாட்டில் மாற்றம் வந்துவிடப் போவதில்லை.

இன்றைய உலக ஒழுங்கின் யதார்த்தத்தை புரிந்து கொண்டு இதில் பொருந்திப் போகக்கூடிய வகையிலும் தமது இருப்பைப் பாதுகாத்துக் கொள்ளும் வகையில் தமிழர்கள் தமது உத்திகளை வகுத்துக்கொண்டு புதிய சிந்தனையுடன் தம்மை வலுப்படுத்தி கொள்வதில்தான் அடுத்தக் கட்ட முன்னேற்றம் தங்கியிருக்கிறது. எனவே, தமிழர்கள் தம்மை தாமே ஒருங்கிணைத்துக் கொள்வதே இப்போதைய உடனடி, அவசர பணியாகும் என்று ஈழத்தமிழர் வாழ்வுரிமைக் கூட்டமைப்பு சார்பாக கேட்டுக்கொள்கிறோம்.

'தோழமையுடன்'
**கொளத்தூர் தா.செ.மணி**
ஒருங்கிணைப்பாளர்,
ஈழத்தமிழர் வாழ்வுரிமைக் கூட்டமைப்பு

## இந்தியாவில் ... தொடர்ச்சி ...

ஜே வி பி பிரித்தபின்னர் இணைந்த வட கிழக்கு மாகாணங்கள் இரண்டு மாகாணங்களாக பிரிக் கப்பட்டு இலங்கையில் எட்டு மாகணங்கள் என்பது ஒன்பது மாகாணங்கள் என பட்டியல் இடப்பப்பட்டது.

ஏற்கனவே தமிழீழம் பெறுவதற்காக ஈழத் தமிழ் இளைஞர்களுக்கு பயிற்சி வழங்கிய இந்திய அரசு இலங்கையில் தனிநாடு அமைப்பதற்கு எந்த ஒரு ஆதரவும் வழங்கவில்லை. அதைவிட ஈழத்தமிழர்களுக்கான மாகாணத்தில் அதிகாரப் பகிர்வை கூட பூரணமாக வழங்க இலங்கை அரசை நிர்பந்திக்கவில்லை. சமஷ்டி அடிப்படையிலான தீர்வுக்காக இலங்கையை வலியுறுத்தவில்லை, ஈழத்தமிழர்கள் நலனை விட தமது நலனை மட்டும் பார்க்கும் நாடாகவே இந்தியா இன்றுவரை செயல் படுகிறது.

அதைவிட மாகாணசபை தேர்தலைக்கூட நடத்த பின்னடிக்கும் இலங்கையை வலியுறுத்த இந்தியாவால் முடியவில்லை. இந்தியாவின் அயல் நாடாக உள்ள இலங்கையில் தமிழர்களுக்கு தனிநாடுவழங்கததடையாகஉள்ளதும்இந்தியாதான். இந்தியாவின் வழிகாட்டலுடனேயே 2009 மே18 ல் போர் மௌனித்ததும், இலட்சக்கணக்கில் இனப்படுகொலை நடந்ததும் தான் உண்மை.

தமிழ்நாட்டைப்பொறுத்தவரை பல்வேறு கட்சிகள் சட்டசபை தேர்தல் மாகாணதேர்தல் களை எதிர்கொண்ட போதும் அங்கு தமிழ் நாட்டை தனிநாடாக பிரிக்க வேண்டும் என்ற கோரிக்கையை அவர்கள் என்றுமே கோரவில்லை. தமிழ்நாட்டு அரசியல் கட்சிகள், அரசியல் தலைவர்கள் எல்லோரும் இலங்கையில் தமிழர் களுக்கான தனிநாடு தேவை என்பதை மட்டுமே வலியுறுத்துவதே அவர்களுடைய கடந்தகால வரலாறாகும். அவர்களுடைய அரசியலுமாகும்.

எனவே மணிசேகர் ஐயர் கூறும் திராவிட சக்திகளை இணைத்து அங்கு தனி நாடு அமைப்போம் என கூறுவது வெறும் விளை யாட்டுச்செய்தியாக மட்டுமே பார்க்கலாம்.

• • •

## இஸ்ரேலுக்கு ... தொடர்ச்சி ...

வலி யுறுத்தியது, இல்லையெனில் "இஸ்ரேல், அமெரிக்காவுடன் ஒருங்கிணைந்து, மீண்டும் தாக்கு தல் நடத்தும் என இஸ்ரேலிய பாது காப்பு அமைச்சர் இஸ்ரேல் காட்ஸ் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, உடல்களைத் திருப்பி அனுப்புவதில் ஏற்படும் தாமதம் குறித்து இஸ் ரேலிய கைதிகளின் குடும்பங்கள் வேதனை யில் உள்ளனர், எனவே இடிபாடுகள் அகற்றப்பட வேண்டும் என்று ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது, அதில் 55 மில்லியன் டன்கள் காசா முழுவதும் பரவியுள்ளன. மேலும் 10,000 க்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் இடிபாடுகளுக்கு அடியில் காணாமல் போயிருக்கலாம் என்று அஞ்சப்படுகி றது.

மீண்டும் போருக்குச் செல்வதற்கான ஒரு காரணத்தை இஸ்ரேல் விரும்பினாலும், அதனை மீண்டும் தொடங்கும் அதிகாரம் இஸ்ரேலின் கைகளில் இல்லை. இந்த நேரத்தில், இஸ்ரேல் மீண்டும் உணவு, மருந்து, தண்ணீர் மற்றும் மீட்புக்குத் தேவையான உபகரணங்களை ஆயுத மாக்குகிறது. காசாவிற்குள் அனுமதிக்கப்படும் லாரிகளின் எண்ணிக்கையை அது குறைத்து வருகிறது.

எப்படியிருந்தாலும், ஷர்ம் எல்-ஷேக்கில் ட்ரம்ப் கையெழுத்திட்ட அந்த ஒப் பந்தத்தின் உரை, அனைத்து வேறுபாடுகளும் பேச்சுவார் த்தை மூலம் தீர்க்கப்படும். இஸ்ரேலில் 200 அமெரிக்க வீரர்கள் அதைச் செய்ய உள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.







## கொழும்பு துறை ... தொடர்ச்சி ...

துறைமுகத்திற்குச் செல்லும் புதிய அதிவேக வீதியை நிர்மாணிப்பதற்காக பூமியைத் அகழ்ந்த போது ஜூலை 13, 2024 அன்று அந்த பிரதேசத்தில் அமைந்துள்ள பழைய செயலக வளாகத்தில் மனித எலும்புக்கூடுகள் முதன்முதலில் கண்டு பிடிக்கப்பட்டன.

இது தொடர்பில் நீதிமன்றத்திற்கு அறி வித்த பின்னர், கொழும்பு புதுக்கடை மேலதிக நீதவான் பண்டார இலங்கசிங்கவின் உத்தரவின் பேரில், செப்டெம்பர் 5, 2024 அன்று அந்த இடத் தில் அகழ்வாய்வு பணிகள் ஆரம்பமாகின.

தற்செயலாக கண்டுபிடிக்கப்பட்ட கொழும்பு துறைமுக மனித புதைகுழியிலிருந்து குறைந்தது 106 பேரின் மனித எலும்புகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன, இது நாட்டில் இது வரை அகழ்வாய்வு செய்யப்பட்ட நான் காவது பெரிய மனித புதைகுழியாக பதிவாகியுள்ளது.

## ராஜீவ் காந்தி ... தொடர்ச்சி ...

மிகக் குறைவு. இலங்கைக்கான இந்திய ஹை கமிஷனர் ஜே.என்.தீட்சித் தான், சகல அதிகாரத்து டன் ஒரு சர்வாதிகாரி போல இருந்தார். அதிகார வர்க்கம் அவருக்குத்தான் கட்டுப்பட்டது. ஹர்கிரட் சிங் போன்றவர்கள் கூறிய நியாயங்கள் நிராகரிக்கப் பட்டன. தீட்சித் சொன்னதைத்தான் ராஜீவ் நம்பினார். அதுதான் ராஜீவ் விட்ட பிழை, -ஜே.என். தீட்சித் போதாதென்று, தமிழர் களின் விடுதலைப் போராட்டத்தைப் புரிந்து கொள்ளவே முயலாத ஹரிஹரன் போன்ற உளவுத்துறை அதிகாரிகள் இன்னொருபுறம். பிரபாகரன் சுட்டுக் கொல்லப்பட்டார் என்று அப் போதே உச்சஸ்தாயியில் முழங்கியது இந்திய உளவுத்துறை, ராஜீவ் அதை நம்பினாரா இல்லையா என்பது தெரியவில்லை. சென்னையிலிருந்து வெளிவருகிற மஞ்சள் பத்திரிகை ஒன்று, ஹரிஹரன் கோஷ்டியினரை நம்பி - 'பிரபாகரன் சுட்டுக் கொலை' என்று வால் போஸ்டர் போட் டதையெல்லாம் மறக்கவே முடியவில்லை.

ஒட்டுமொத்தத் தமிழகத்தையும் துயர் சூழ்ந்த அந்த நேரத்தில், அது பொய்ச் செய்தி என்பதை அம்பலப்படுத்தியதும், ஒரு தமிழ்ப் பத்திரிகைதான். முள்ளை முள்ளால் எடுத்த அந்தப் பத்திரிகையின் ஆசிரியர் குறித்தும் குறிப்பிட்டாக வேண்டும்.

அய்யரின் ஒரே ஒரு உரை. இவ்வளவு நினைவுகளைக் கிளப்பி விட்டிருக்கிறது.

தொடரும்...

## இந்தியாவின் ... தொடர்ச்சி ...

பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரி வித்துள்ளார்.

ஹரிணி அமரசூரிய, இலங்கையின் பிரதம ராகப் பதவியேற்ற பின்னர் இந்தியாவிற்கு மேற் கொண்டிருக்கும் முதலாவது உத்தி யோகபூர்வ விஜயத்தில் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரை சந்தித்தார்.

இதன்போது நடத்தப்பட்ட கலந்துரை யாடல்களில், பொருளாதார ஒத்துழைப்பு, தொடர்பாடல், டிஜிட்டல் பரிவர்த்தனை, கல்வி மற்றும் இரு நாடுகளுக்கு இடையிலான உறவினை பலப்படுத்துவது குறித்து கவனம் செலுத்தப்பட்டன.

அத்துடன் கடல்சார் இணைப்பு, மின் சாரம், வலுசக்தி, வர்த்தகம் உட்பட இலங்கையில் மேற்கொள்ளப்படும் பரந்த அளவிலான அபி விருத்தித் திட்டங்களுக்கு இந்திய அரசாங்கம் தொடர்ச்சியாக வழங்கிவரும் உதவிகளையும், நிதி ரீதியாகப் பெற்றுத்தரும் ஒத்துழைப்பினை யும் பிரதமர் பாராட்டியுள்ளார்.

## காத்தான்குடி ... தொடர்ச்சி ...

1990 அக்டோபர் 30ல் யாழ் முஸ்லிம் மக்களை வெளியேற்றுவதற்கான மூலகாரணம் கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக அம்பாறை திருக்கோயில் தொடக்கம் மட்டக்களப்பு கதிர வெளிவரையும் இலங்கை இராணுவத்துட னும், தனித்தும் முஸ்லிம் ஊர்காவல் படையினர் தமிழ் கிராமங்கள் மீதும், தமிழர்கள் மீதும் திட்டமிட்டு நடத்திய இனப்படுகொலைகள். தமிழ் முஸ்லிம் மக்கள் மத்தியில் பிரிவுகளும் சந்தேகங்களும் ஒருவர் மற்றவர்க்கெதிரான வெறுப்பும், காத் தான்குடி, ஏறாவூர் ஆகிய இடங்களில் பள்ளி வாசல்களிலும், சில இடங்களிலும் முஸ்லிம் மக் கள் படுகொலை செய்யப்பட்டனர்.

இவ்வாறான ஒரு சம்பவம் யாழில் ஏற்படாமல் தடுக்கவே முஸ்லிம் மக்கள் "இனப் பாதுகாப்புக்காக வெளியேற்றப்பட்டனர்" இதனை இனச்சுத்திகரிப்பு என 2014 வரை எந்த முஸ்லிம் அமைப்பும், அரசியல் வாதிகளும் கூற வில்லை. அவர்கள் அதனை "முஸ்லிம் மக்களை பலவந்தமாக வெளியேற்றப்பட்ட நாள்" என்றே குறிப்பிட்டனர்.

2014 ஏப்ரல் 26 ல் தந்தை செல்வாவின் 37 வது ஆண்டு நினைவு மட்டக்களப்பு வந்தாறு மூலையில் தமிழ்தேசிய கூட்டமைப்பு மூலம் இடம்பெற்ற நிகழ்வில் நினைவு பேருரையாற் றிய யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம் ஏ சுமந்திரன் யாழில் இருந்து முஸ்லிம்களை வெளியேற்றிய விடயம் "இன சுத்திகரிப்பு " என்ற வார்த்தையை முதல் முதலாக கூறினார்.

அதன்பிற்பாடுதான் இனச்சுத்திகரிப்பு என்ற வார்த்தையை முஸ்லிம் பிரமுகர்கள் பயன் படுத்துவதை காணலாம்.

ஆனால் விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரன் மற்றும் தளபதிகள் கிளிநொச்சியில் 2004ல் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஷ் தலைவர் றவூஹக்கீம் உட்பட அனைத்து முஸ்லிம் அரசியல் தலைவர்களுடன் இடம்பெற்ற சந்திப்பில் யாழில் இருந்து முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்டதற்கும், காத்தான்குடி, ஏறா வூர் முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்ட மைக்கும் கவலையையும் வருத்தத்தையும் தெரி வித்தனர்.

35, ஆண்டுகள் கடந்த அந்த வரலாற்று நினைவை அனுஷ்டிக்கும் உரிமை முஸ்லிம் சமூகத்துக்கு உண்டு. அனுஷ்டிப்பது, நினைவு கூருவது தவறு என்று எவரும் கருதவில்லை. ஆனால் அவ்வாறான நினைவுகளில் உரையாற்ற அழைப்பவர் எப்படியானவர் என்பதையும் கருத்தில் எடுப்பதுதான் இன நல்லெண்ணத்திற்கு வழி கோலும்.

அருண் சித்தார்த் செம்மணி புதைகுழியில் தமிழர்களுடைய எலும்புக்கூடுகள் தோண்டப் படும்போது அதனை திசை திருப்ப முல்லைத்தீவு துணுக்காய் பிரதேசத்தில் உள்ள காணி ஒன்றில் தமிழீழ விடுதலைப்புலிகளால் சித்திரவதைக்கு உள்ளாகி புதைக்கப்பட்ட 4000 பேரின் உடல்கள் இருப்பதாக கூறி குறித்த பகுதிக்கு விஜயம் செய்த அருண் சித்தார்த், பொதுமக்களால் பகிரங்கமாக வெளியேற்றப்பட்டவர்.

யாழ். சிவில் சமூகம் என்ற பெயரில் பதியப்படாத அமைப்பை அருண் சித்தார்த் இயக்கிவருவதாகவும், தமிழ் தேசியத்துக்கு எதிராக செயற்பாடுகளை அவர் முன்னெடுப்ப தாகவும் தொடர் குற்றச்சாட்டுக்கள் முன்வைக் கப்படுகின்றன.

இவ்வாறான ஒரு நபரை யாழ்ப்பாணத்தில் இருந்து வரவழைத்து காத்தான்குடியில் உரை யாற்ற வைத்ததன் நோக்கம் மென்மேலும் கிழக்கு மாகாணத்தில் தமிழ் முஸ்லிம் உறவை சீர்குலைக்கும் ஒரு செயலாகவும் மாறலாம்.

## இலங்கை எதிர் .. . தொடர்ச்சி ...

முக்கியமான தாக்கம், ஜே.வி.பி.யின் ஆதிக்கத்திலு ள்ள உள்நாட்டு அரசியலில் ஏற்பட்டிருக்கும் சல சலப்பாகும்.

விசேடமாக தேசிய மக்கள் சக்தியின் ஊடாக அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும், ஆனால் ஜே.வி.பி.யின் அடிப்படை உறுப்பினரல்லாத ஒருவராகவே ஹரிணி அமரசூரிய காணப்படுகின் றார்.

அவர், அமெரிக்காவிலும் இந்தியாவிலும் கல்வி பயின்று, மேற்குலக நாடுகளுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருப்பதன் காரணமாக, ஜே.வி.பி.யின் அடிப்படை உறுப்பினர்கள் மத்தி யில் 'ஏகாதிபத்தியவாதத்துக்கு சார்பானவர்' என்று சந்தேகிக்கப்படுகின்ற நிலைமைகள் உள்ளன.

அதுமட்டுமன்றி, அண்மைய காலத்தில் இந்தியாவும், அமெரிக்காவும் ஏனைய மேற்கு லத்தினரும் ஹரிணியை வைத்து காய்நகர்த்துவதில் பெரும் பிரயத்தனம் காண்பித்திருந்தனர் என்பது வெளிப்படையான விடயம்.

இவ்வாறான நிலையில், தற்போது சர்வ தேச அரங்கில் ஹரிணி அமரசூரியவுக்குக் கிடைத்த அதிகப்படியான அங்கீகாரமும், வரவேற்பும், அரசாங்கத்தை பின்னால் இருந்து இயக்கும் டில்வின் சில்வாவுக்குச் சவாலான நிலைமைகளை தோற்றுவித்துள்ளமை மறுதலிக்க முடியாத விடயம்.

ஆனால், டில்வினைப் பொறுத்தவரையில் சர்வதேச அரங்கை தமக்குச் சாதகமாகப் பயன் படுத்துவதற்கு அநுரகுமார தலைமையிலான அரச பிரதிநிதிகளை தீவிரமான நடவடிக்கைகளில் ஈடுபடுத்தியுள்ளார். அந்தக் காய்நகர்த்தலின் ஒரு அங்கமாக பிரதமர் அமரசூரியாவின் விஜயம் அமைந்திருக்குமானால் அவர் சர்வதேச அரசியல் சூழ்நிலைகளைத் தனக்குச் சாதகமாக மாற்றிக் கொள்ளவே முனைவார்.

ஒருவேளை, டில்வினின் அரசியல் கணக்கிற்கு அப்பால் பிரதமர் அமரசூரியவின் 'புத்திசாலித்தனமான நகர்வுகள்' காணப்படுமாக இருந்தால் பதவியிலிருந்து ஹரிணி அமரசூரிய நீக்கப்படலாம் என்ற ஏற்கனவே இருந்த வதந்திகள் பொய்த்துவிடும்.

அண்மையில், அமைச்சரவை மாற்றம் குறித்துக் கருத்துக்களை வெளியிட்ட அமைச்சர் அனில் ஜெயந்த பெர்னாண்டோ, பிமல் ரத்நாயக் கவுக்கு 'இதைவிட இன்னும் பெரிய பொறுப்பு விரைவில் வழங்கப்படும்' என்று கூறியிருந்தார், அப்பதவி பிரதமர் பதவியாக இருக் கக்கூடும் என்ற ஊகம் அனைவர் மத்தியிலும் உள்ளது.

ஜே.வி.பி. தனது நம்பிக்கைக்கு அப்பாற் பட்ட ஒருவரிடம் அதிகாரத்தைத் தக்க வைத் துக் கொள்ள விரும்பாது என்பது அடிப் படையான விடயம். அந்த வகையில், ஜே.வி. பி.யின் கட்டுப்பாட்டுக்குள் அப்பாற்பட்ட ஹரிணி அமரசூரியவின் சர்வதேச விஜயங்கள் இடம்பெற்றிருக்குமாக இருந்தால் அவருக்கு வெளிப்படையாக வலுவூட்டுவது போல் தோன்றி னாலும், உள்நாட்டுக் களத்தில் அவரது பதவியைப் பறிப்பதற்கான வாய்ப்புக்களையே மேலும் அதிகரித்துள்ளன.

எவ்வாறாயினும், பிரதமர் ஹரிணி அமரசூரியவின் தற்போதைய இராஜதந்திரப் பயணங்கள், இலங்கை புவிசார் அரசியல் போட்டி யைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் நிலை யையும் வெளிப்படுத்தியுள்ளது.

சீனாவுக்கான அரசியல் ஆதரவையும், இந்தியாவுடனான நெருக்கத்தையும் ஒரே நேரத்தில் பிரதமர் அமரசூரிய இலாவகமாகக் கையாண்ட விதம், உள்நாட்டு அரசியல் களத்தில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய வாய்ப்புகளைக் கொண்டிருந்தாலும், ஜே.வி.பியின் காய்நகர்த்தலுக் குள் இராஜதந்திர தரப்புக்கள் சிக்கிவிட்டனவா என்ற கேள்விகளையும் எழுப்பாமலில்லை.

• • •

## ஆப்கான் - பாகிஸ் ... தொடர்ச்சி ...

புதன்கிழமை மாலை காபூலில் நடந்த இரண்டு வெடிப்புகள் நிகழ்ந்துள்ளன. பாகிஸ்தான் படையினர் மேற் கொண்ட வான் தாக்குதல்கள் என்று கூறப்பட்டாலும், தலிபான் செய்தித் தொடர்பாளர் ஜபிஹுல்லா முஜாஹித்இஅதனை உறுதிப்படுத்தவில்லை.

முன்னதாக, ஆப்கானிஸ்தான் தலிபான் போராளிகள் தென்மேற்கு மற்றும் வடமேற்கில் உள்ள இரண்டு முக்கிய எல்லைச் சாவடிகளைத் தாக்கியதாக பாகிஸ்தான் இராணுவம் தெரி வித்துள்ளது. இரண்டு தாக்குதல்களும் வெற்றி கரமாக முறியடிக்கப்பட்டன என்றும், ஆப் கானிஸ்தானின் காந்தஹார் மாகாணத்தில் உள்ள ஸ்பின் போல்டாக் அருகே சுமார் 20 தலிபான் போராளிகள் கொல்லப்பட்டதாகவும் அது தெரிவித்துள்ளது.

ஆனால் 15 பொதுமக்கள் இறந்ததாகவும், 100 பொதுமக்கள் காயமடைந்ததாகவும், பாகிஸ்தான் வீரர்கள் கொல்லப்பட்டதாகவும், ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாகவும், அதன் போராளிகளில் "இரண்டு முதல் மூன்று" பேர் கொல்லப்பட்டதாகவும் தலிபான்கள் தெரிவித்துள்ளனர். ஆனால் பாகிஸ்தான் அதனை நிராகரித்துள்ளது. பாகிஸ்தான் தனது சமீபத்திய உயிரிழப்புகளை விவரிக்கவில்லை என்றாலும், கடந்த வாரம் நடந்த மோதல்களில் 23 வீரர்கள் கொல்லப்பட்டதை முன்னர் உறுதிப் படுத்தியிருந்தது. ஆப்கானிஸ்தான் அரசு தொலைக்காட்சி பத்திரிகையாளர் அப்துல் கஃபூர் அபித் பாகிஸ்தான் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## சத்தியாக்கிர ... தொடர்ச்சி ...

எங்களை கைது செய்கிறார்கள். எங்கள் விளை நிலங்கள் எங்களுக்கு வேண்டும்" என தெரிவித்தார்.

இந்த விவசாயியின் மனைவி கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர் திருகோணமலை மாவட்ட செயலகம் முன் இடம் பெற்ற கவன யீர்ப்பின் போது பிரதம பொலிஸ் பரிசோதகர் ஒருவரால் தூக்கி வீசப்பட்டார். இதனால் அவர் படுகாயமடைந்திருந்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

குறித்த பெண்ணை தாக்கிய காவல்துறை உயரதிகாரி வடக்கில் உள்ள தலைமையகப் பொலிஸ் நிலையமொன்றுக்கு தலைமை பொறுப் பதிகாரியாக நியமிக்கப்பட்டமையும் குறிப் பிடத்தக்கது.

தேர்தல் காலங்களில் மாத்திரம் மக்கள் வாக்குகளை பெறுவதற்காக பல பொய் வாக்குறு திகளையும் உபாயங்களையும் கையாளும் அரசியல் பிரதிநிதிகள் தேர்தலின் பின் மக்கள் வாக்குகளை விற்பனை செய்யும் நிலைக்கு ஆளாகியுள்ளனர்.

## ஹவுத்திகளின் . .. தொடர்ச்சி ...

சனாவில் நடந்த வான்வழித் தாக்குதல்களில் அல்-கமாரி உட்பட குழுவின் மூத்த நபர்களை குறி வைத்ததாக இஸ்ரேல் கூறியது. ஆனால் அந்த தாக்குதலில் ஏமனின் பிரதமர் மற்றும் பல அமைச்சர்கள் கொல்லப்பட்டனர்.

காசாவில் இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையே அமெரிக்க ஆதரவுடன் ஒரு பலவீனமான போர் நிறுத்தம் ஏற்பட்ட ஆறு நாட்களுக்குப் பிறகு அல்-காமரியின் மரணம் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த போர் நிறுத்தம், கிட்டத்தட்ட 68,000 பாலஸ்தீனியர்களைக் கொன்று, கடுமையான மனிதாபிமான நெருக் கடியைத் தூண்டிய காசா மீதான இஸ்ரேலின் இரண்டு ஆண்டு போரை நிறுத்தியுள்ளது. காசாவில் இனப்படுகொலையை நடத்தியதாக இஸ்ரேல் உரிமைகள் குழுக்களாலும் ஐக்கிய நாடுகளின் விசாரணை ஆணையத்தாலும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

### 1700 ரூபா ... தொடர்ச்சி ...

செயற்பாடு தொடர்பில் தமது எக்ஸ் பக்கத்தில் பதிவு ஒன்றை இட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் "அரசாங்கம் அடிப்படை வேதனத்தை உயர்த்த உள்ளதா, அல்லது பிற மேலதிக கொடுப்பனவுகள் மூலம் ரூ1,750 வருகிறதா?" என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

"ஜனாதிபதி முதலில் 3 அரச பெருந் தோட்ட நிறுவனங்களிலும் தொழிலாளர்களின் வேதனத்தை உயர்த்தி விட்டு, பின்னர் தனியார் கம்பனிகளுடன் பேச வேண்டும். அடிப்படை வேதனம் மட்டுமே EPF பங்களிப்புக்கு உட்பட்டது. கொடுப்பனவுகள் அல்ல. கம்பனிகளின் நிலையான நிலைப்பாடு எப்போதும் உறுதியானது. தொழிலாளர்கள் அதிக கொழுந்து பறித்தால், கூடுதல் வேதனம் வழங்க தயார். இது தான் அவர்களின் சூத்திரம். ஜனாதிபதியின் சூத்திரமும் இதுவென்றால், இதில் புதியதொன்றும் இல்லை. தொழிலாளர்கள் அதிக கொழுந்து பறிக்க முடியாததற்குக் காரணம் என்ன? ஏனெனில் தோட்டங்கள் பல தசாப்தங்களாக பராமரிக்கப் படவில்லை.

ஆகவே, கொழுந்து குறைந்துள்ளது. தொழிலாளர்கள் பங்குதாரர்களாக மாற வேண்டும். சிறுதொழில் கூட்டுறவு சங்கங்கள் மூலம் இதை அடைய முடியும். இதில் அரசு, தொழிலாளர்கள் மற்றும் நிறுவனங்கள் ஆகியோருக்கிடையில் கூட்டு ஒப்பந்தம் உருவாக வேண்டும். இதுதான் நிரந்தர தீர்வு." என்று பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், பண்டாரவளையில் வழங்கப்பட்ட ஆவணங்கள் காணி உறுதி பத்திரங்கள் இல்லை எனவும் அவை வெறுமனே பயனாளிகள் என குறிப்பிடப்பட்டுள்ள கடிதங்கள் என்றும் மனோ கணேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் புதிய வீடுகளோ காணியோ எவ்வித தரவுகளும் இன்றி குறித்த ஆவணம் வழங்கப்பட்டுள்ளதாகவும் இது பெருந்தோட்ட மலையக மக்களை ஏமாற்றும் செயல் என்றும் மனோ கணேசன் விமர்சித்துள்ளார்.

இதேவேளை, இந்த விடயம் தொடர்பில் தமது சமூக ஊடக பக்கத்தில் பதிவிட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான், 'அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட வீட்டு ஆவணப் பத்திரங்கள் வெறும் காகிதத் தாள்களை வழங்கும் ஒரு விளம்பர நிகழ்ச்சி மாத்திரமே' என்று தெரிவித்துள்ளார்.

"இந்நிகழ்வானது 2000 வீடுகளைக் கையளிப்பது அல்ல!, ஆனால் 2000 காகிதத் தாள்களைக் கையளிப்பதை உள்ளடக்கிய ஒரு விளம்பர நிகழ்வு மாத்திரமே" என்று சுட்டிக் காட்டியுள்ளார். "இந்த காகித ஆவணம் வழங்கும் நிகழ்வுக்கு எந்த தேவைப்பாடுகளும் இல்லை, கடந்த ஒரு வருடமாக மலையகத்தில் அல்லது மலையக சமூகத்திற்காக எந்த ஒரு வேலையும் செய்யப்படவில்லை என்ற உண்மையிலிருந்து பொதுமக்களைத் திசைதிருப்புவதற்கான இது ஒரு தந்திரோபாயம் மட்டுமே. குறிப்பாக வேதன அதிகரிப்பு இல்லை, வீடுகள் கட்டப்படவில்லை, அபிவிருத்திகள் ஏதும் இடம்பெறவில்லை" என்று பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

மேற்கூறிய அனைத்து செயற்பாடுகளும் வெவ்வேறு தரப்பினரினால் நிகழ்த்தப்படும் நாடகங்களாகவே தோன்றுகின்றன. தமது வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக அன்றாடம் போராடிக் கொண்டிருக்கும் மலையக மக்களும் அவ்வப்போது அதனை உண்மை என்று நம்பி ஏமாற்றமடைகின்றனர்.

• • •

### குழந்தைகளுக் ... தொடர்ச்சி ...

தூய்மை மற்றும் பாதுகாப்பின் சின்னமாக சித்தரிக்கும் சந்தைப்படுத்தல் விளம் பரங்களை அது மேற்கொண்டிருந்தது.

அதாவது ஆஸ்பெஸ்டாஸால் மாசுபடுத்தப்பட்ட பவுடரைத் தெரிந்தே விற்றதாகக் கூறப்படுகின்றது. எனினும் பவுடர் தேவையான எந்தவொரு ஒழுங்குமுறை தரநிலைகளுக்கும் இணங்குவதாக இருந்தது என, அதில் ஆஸ்பெஸ்டாஸ் இல்லை, மேலும் புற்றுநோயை ஏற்படுத்தாது என்று நிறுவனம் தெரிவித்துள்ளது. குழந்தைப் பவுடரின் விற்பனை 2023 ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் நிறுத்தப்பட்டது.

அமெரிக்காவில் பல வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன மற்றும் உரிமை கோருபவர்களுக்கு பில்லியன் கணக்கான டாலர்கள் இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது. சில வழக்குகளில் நிறுவனம் வெற்றிகரமாக மேல்முறையீடு செய்துள்ளது. இங்கிலாந்தில் கோரப்பட்ட இழப்பீடு நூற்றுக்கணக்கான மில்லியன் பவுண்டுகள் வரை நீட்டிக்கப்படலாம் என்றும், இந்த உரிமைகோரல் பிரிட்டிஷ் வரலாற்றில் மிகப்பெரிய வழக்காக மாறக்கூடும் என்றும் மதிப்பிடுகின்றனர்.

ஜேஅண்ட்ஜே டால்கம் பவுடர்களில் பயன்படுத்தப்படும் டால்க், இயற்கையாக நிகழும் ஒரு கனிமமாகும், இது பெரும்பாலும் ஆஸ்பெஸ்டாஸ் படிவுகளுக்கு அருகாமையில் வெட்டப்படுகிறது. இது புற்றுநோயுடன் தொடர்புடைய நார்ச்சத்து ஊசி போன்ற வடிவத்தில் உள்ள ஆஸ்பெஸ்டாஸ் தாதுக்கள் ஆகும்.

### சீனாவுக்கு உளவு ... தொடர்ச்சி ...

விதிக்கப்படலாம் என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த டெல்லிஸ், வெளியுறவுத் துறையின் ஊதியம் பெறாத மூத்த ஆலோசகராகவும், பாது காப் புத் துறையில் நிகரமதிப் பீட்டு அலுவலகத்தின் ஒப்பந்தக்காரராகவும் இருந்ததாக நீதித்துறை தெரிவித்துள்ளது. டெல்லிஸ் 2001 இல் வெளியுறவுத்துறையில் பணியாற்றத் தொடங்கினார்.

செப்டம்பர் 25 அன்று டெல்லிஸ் அமெரிக்க விமானப்படை ஆவணங்களை அச்சிட்டதாக மத்திய அரசு வழக்கறிஞர்கள் கூறுகின்றனர், அதில் இராணுவ விமானத் திறன்கள் பற்றிய தகவல்கள் இருந்தன. கடந்த சில ஆண்டுகளாக சீன அரசாங்க அதிகாரிகளு டன் அவர் தொடர்ச்சியான சந்திப்புகளை நடத்தியதாகவும் அவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

தெற்காசிய பாதுகாப்பு மற்றும் அமெரிக்க-இந்திய உறவுகள் குறித்த வாஷிங்டனின் முன்னணி நிபுணர்களில் ஒருவராக டெல்லிஸ் நீண்ட காலமாகக் கருதப்படுகிறார். ஜனாதிபதி ஜார்ஜ் டபிள்யூ. புஷ்ஷின் சிறப்பு உதவியாளராகவும், மூலோபாய திட்டமிடல் மற்றும் தென்மேற்கு ஆசியாவிற்கான மூத்த இயக்குநராகவும் அவர் தேசிய பாதுகாப்பு கவுன்சிலில் பணியாற்றினார்.









இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு.
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை.

# தாயகமும் வாழ்வும்





